# மூன்றாவது மாநில நிதி ஆணையம்

## அத்தியாயம் –XV

## பரிந்துரைகளின் சுருக்கம்

மூன்றாவது மாநில நிதி ஆணையத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வு வரம்புகளை கவனமாகப் பரிசீலித்து அதன் அடிப்படையில் நிதி ஆணையம் இவ்வறிக்கையைத் தயார் செய்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒப்புமைத் தொடர்பு அட்டவணை, மூன்றாவது மாநில நிதி ஆணையத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வு வரம்புகளில் உள்ளடக்கிய பொருள்கள் பற்றி மேலோட்டமாகத் தெரிவிக்கிறது. இந்த அட்டவணை தவிர, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் சுருக்கம், அத்தியாயம் வாரியாக பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது:

| வ.எண் | | பத்தி எண் மற்றும் ஆய்வு வரம்புகளின் கூறுகள் | அறிக்கையில் இடம் பெறும் அத்தியாயம் |
|---|---|---|---|
| 2) | | ஆணையம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை குறித்து ஆய்வு செய்ய வேண்டும் | அத்தியாயம் -VI |
| அ) | i)<br>ii)<br>iii) | நிதிப் பகிர்வுத் தொகைகளை பகிர்ந்தளித்தல்<br>ஒப்படைப்பு செய்யப்பட்ட வருவாய் மற்றும்<br>உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் | அத்தியாயம் -XIV<br>அத்தியாயம் -V |
| ஆ) | | உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் | அத்தியாயம் -VI<br>அத்தியாயம் -VIII |
| இ) | i)<br>ii) | உள்ளாட்சி அமைப்புகள் அதிக திறமைகளைக் கொண்டு செயல்படுவதற்குத் தேவையானநடவடிக்கைகள்<br>பணிகளை வரையறுத்தல் | அத்தியாயம் -VII<br>அத்தியாயம் -XI |
| ஈ | i)<br>ii)<br>iii) | வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட கண்காணிக்கத் தக்க நிதிச் சீரமைப்பு முறைகளை உருவாக்குதல்<br>ஊக்க நிதி<br>மத்திய மற்றும் மாநில அரசுகள் அளிக்கும் மானியங்களைப் பயன்படுத்துதல் | அத்தியாயம் -VII<br>அத்தியாயம் -XIV |

| | | | |
|---|---|---|---|
| | | மானியங்களைப் பயன்படுத்துதல் | அத்தியாயம் -III மற்றும் IV |
| உ | i) | உள்ளாட்சி அமைப்புகளின் வரி முறைகளைக் கருத்திற் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதில் புதிய வாய்ப்புகள் | அத்தியாயம் -V |
| ஊ | | தற்போது நடைமுறையில் உள்ள பொறுப்புடைமை முறைகள் | அத்தியாயம் -IX |
| எ | | உள்ளாட்சி அமைப்புகளை மறுவகைப்பாடு செய்தல் | அத்தியாயம் -X |
| 3) | | உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆய்வு செய்தல் | அத்தியாயம் -VI |
| 4) | | மாநில அரசின் நிதி ஆதாரங்கள் மற்றும் செய்யவேண்டிய பொறுப்புகள் | அத்தியாயம் -XIII |
| 5) | i) | தற்போதைய நிதிப் பகிர்வு அளவுகள் | அத்தியாயம் - XIV |
| | ii) | உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்களுக்கான தேவைகள் | அத்தியாயம் - VI |
| | iii) | 2007 முதல் 2012 வரை உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்கள் | அத்தியாயம் - VI |
| | iv) | பதினோராவது மத்திய நிதி ஆணையம் மற்றும் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நிலை | அத்தியாயம் -III |
| | v) | தொடர் செலவு மற்றும் தொடராச் செலவினங்களில் சிக்கனம் மற்றும் திறமையுடன் செயல்படுவதில் சிறந்த நிதி மேலாண்மைக்கான சாத்தியக் கூறுகள். | அத்தியாயம் -VII |
| | vi) | மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை வகைப்பாடு செய்தல் | அத்தியாயம் -X |
| 6) | | கிராம சபையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தல் | அத்தியாயம் -IX |
| 7) | | ஆய்வு வரம்புகளைச் சார்ந்த பிற பொருள்கள் | அத்தியாயம் -XII |

| | | | |
|---|---|---|---|

## அத்தியாயம் - III

## பதினோராவது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் தற்போதைய நிலை

1. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் கணக்குப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டு மத்திய அரசால் பிடித்தம் செய்யப்பட்டுள்ள ரூ.2,595.60 இலட்சம் தொகையையும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை விவர தகவல் தொகுப்பினை ஏற்படுத்த ஒதுக்கப்பட்டு பிடித்தம் செய்யப்பட்ட ரூ.59.35 இலட்சம் தொகையையும் விடுவிப்பதற்காக மாநில அரசின் நிதித்துறை மத்திய அரசின் நிதி அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டு நிதியை விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. இந்தியத் தலைமை கணக்குத் தணிக்கைத் துறை பரிந்துரைத்த உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குப் படிவங்கள் மற்றும் அடிப்படை விவர தகவல் தொகுப்புப் படிவங்களில் உள்ள விவரங்களை உள்ளாட்சி அமைப்புகள் தொடர்ந்து கால முறை தோறும் சரி செய்து வரவேண்டும். இவ்வாறு தொடர்ச்சியாகப் பராமரிக்கப்பட்டு வரும் புள்ளி விவரங்கள் அடுத்து வரும் ஆணையத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். அடிப்படை விவர தகவல் தொகுப்பு மேலாண்மையில் ஒரு குறிப்பிட்ட நிலையை சாதிப்பதற்காக ஒரு வலுவான கண்காணிப்பு முறையை சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் உருவாக்க வேண்டும்.

## அத்தியாயம் - IV

## பன்னிரெண்டாவது மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகள்

3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு குடிமைப் பணிக்கும் துறை வாரியான மத்திய அரசின் மானிய ஒதுக்கீடுகள் இந்த அத்தியாயத்தில் பத்தி எண் 4 (அ) ல் கூறப்பட்டுள்ளவாறு, 12–வது நிதிக்குழுவின் காலவரம்பான 2005–2010 ஆம் ஆண்டு வரை தொடரலாம்.

4. உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை விவர தகவல் தொகுப்பினை உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை கணினிகள் வாங்குவதற்கும் மற்றும் பல்வேறு நிலைகளில் விவரங்கள் சேகரிக்கும் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

5. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் திடக்கழிவு மேலாண்மைக்கான 50 சதவீத மானியங்கள், 1 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளில், மத்திய நிதி ஆணையம் கருத்துத் தெரிவித்தபடி மக்கு உரம் தயாரிக்கவும் மற்றும் எரிசக்தி திட்டங்களுக்காகவும் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டும். பின்னர் இத்திட்டம் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. எஞ்சியுள்ள 50 சதவீத நிதி இந்த அத்தியாயத்தில் பத்தி எண் 4 (ஆ) ல் கூறப்பட்டுள்ளவாறு மக்கட் தொகை அடிப்படையிலும் மற்றும் துறைவாரியான ஒதுக்கீட்டு அடிப்படையிலும் பிரித்து வழங்கப்படலாம். இந்த நிதி ஒதுக்கீட்டில், அடிப்படை விவர தகவல் தொகுப்பினை ஏற்படுத்தவும் மற்றும் கணினி மூலம் தகவல் தொடர்பு அமைப்பினை உருவாக்குவதற்கும் நிதி தேவைப்படும். பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு தொகையை ஒதுக்கவும் பிரித்து வழங்கவும் துறை தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படலாம். 75 சதவீதம் மக்கட்தொகை அடிப்படையிலும் 25 சதவீதம் வருவாய் வசூல் அடிப்படையிலும் மத்திய நிதிக்குழு மானியங்களை பிரித்து வழங்குவதற்கு உயர்மட்டக்குழு உருவாக்கிய இந்தக் கோட்பாடு முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

## அத்தியாயம் - V

## உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

### சொத்துவரியின் மீதான சீர்திருத்தங்கள்

7. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரிச்சீராய்வு செய்யும் முறைக்கு நகராட்சிகள் சட்டம் மற்றும் மாநகராட்சிகள் சட்டத்தில் உள்ள தடங்கல்கள் உரிய சட்டத் திருத்தங்கள் மூலம் நீக்கப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிலும் மண்டல வரி வீதங்களில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச அளவுகள் நகர் மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்ற பின்னர் அரசால் ஒப்புதல் அளிக்கப்படலாம்.

9. சொத்துவரியின் மீதான பொது வரிச்சீராய்வு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்பட வேண்டும். அத்தகைய அடுத்த வரிச்சீராய்வு 01.04.2007 அன்று செய்யப்பட வேண்டும். நிலத்தின் மதிப்பில் ஏற்படும் உயர்வு மற்றும் பணவீக்கத்தின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் வரி உயர்வு செய்யும் முறையினை அரசு பரிசீலனை செய்யலாம். இதனால், பொது வரிச்சீராய்வு செய்யப்படும்பொழுது பொது மக்கள்மீது அதிக வரிப்பளு சுமத்தப்படாமல் இருக்கும்.

10. தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 1998 –ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் அல்லது தற்போது தயார் செய்யப்பட்டுவரும் புதிய சட்டத்தினை உடனடியாக அறிவிக்கை செய்யவேண்டும். ஏதாவது காரணங்களால் அதனைச் செய்ய முடியவில்லையெனில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்ட்டுள்ள 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் வரி மற்றும் வரியல்லாத வருவாய் அத்தியாயத்தில் உள்ள சட்ட விதிமுறைகளை தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் சேர்க்கலாம். இதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தன்னிச்சையாக வரி ஆற்றலைப் பெருக்குவதற்கு ஏதுவாகும்.

11. மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் தவிர அனைத்து சொத்துக்களும் வரிவிதிப்புக்குட்படவேண்டும். வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் கூட, சொத்துவரியில் 50 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை சேவைக் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும்.

12. உச்ச நீதி மன்றத் தீர்ப்பின்படி, மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களின் மீது சேவைக்கட்டணங்கள் வசூலிக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 285 க்கு சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்காக புதுடில்லி, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தை மாநில அரசு அணுக வேண்டும்.

13. இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 285–ல் மத்திய அரசின் சொத்துக்களல்லாது மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட், பிரசார் பாரதி ஆகியவற்றிற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் விதிமுறைகள் இல்லாததால் அந்நிறுவனங்கள் அனைத்தும் சொத்து வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

14. செல்லிடத் தொலைபேசி நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள அனைத்து செல்லிடத் தொலைபேசிக் கோபுரங்களும் சட்ட விதிமுறைகளின்படியான வரி வீதங்களில் வரிவிதிப்புக்குட்படுத்தப்பட வேண்டும். தேவைப்படின், மேற்படி வரி விதிப்பிற்கு தனியாக வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிடலாம்.

15. மாநில அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் வரிவிதிப்புக்குட்பட்டவையாதலால், தொடக்கப்பள்ளிகள் தவிர அரசுக்குச் சொந்தமான மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் கட்டிடங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களும் வரி விதிப்புக்குட்படுத்தப்பட வேண்டும். இது நகராட்சி தொடக்கப்பள்ளிகள் தவிர இதர நகராட்சி பள்ளிகளுக்கும் பொருந்தும். மழலையர்பள்ளி, மெட்ரிகுலேசன் பள்ளிகள், சுயநிதி பொறியியல், மருத்துவ / பல்மருத்துவக் கல்லூரிகள், மருத்துவம் ஒத்த கல்வி நிறுவனங்கள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சியளிக்கும் மையங்கள் முதலிய கட்டணம் வசூல் செய்யும் கல்வி நிறுவனங்கள் மீது, வர்த்தகக் கட்டிடங்களுக்குப் பொருந்தக்கூடிய வரி வீதத்தைப்போல இருமடங்கு சொத்துவரி விதிக்கப்பட வேண்டும். தொடக்க கல்விச் சட்ட வழிவகைகளில் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும், சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வகை செய்யும் சட்ட விதிமுறைகளை நீக்கவேண்டும்.

16. கேரள சட்டத்தைப் போன்று, இங்கும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குறைந்தபட்ச சொத்து வரி விதிக்கப்பட வேண்டும். கேரள சட்டத்தில் உள்ள குறைந்த பட்ச வரி வீதத்தை விட தமிழகத்திலுள்ள வரி விதிப்பு வீதங்கள் குறைவாக இருக்கும் பட்சத்தில் கேரள சட்டத்தில் உள்ள குறைந்த பட்ச வரி வீதங்களின் அடிப்படையில் தமிழ் நாட்டில் பேரூராட்சிகள் குறைந்த பட்ச வரியாக அரையாண்டுக்கு ரூ 25/-ம் நகராட்சிகள் அரையாண்டுக்கு ரூ 40/–எனவும்

மாநகராட்சிகள் அரையாண்டுக்கு ரூ 50/–எனவும் வரி விதிக்க வேண்டும். மேற்படி, நடவடிக்கைகள் 2007–08 நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

17. பெங்களூர் மாநகராட்சியில் இருப்பதைப் போன்று, சென்னை மற்றும் இதர மாநகராட்சிகளிலும் புவித் தகவல் முறையின் (GIS) உதவியுடன் வரிவிதிக்குட்படாத மற்றும் குறைவான வரிவிதிப்பிற்குட்பட்ட சொத்துக்களை வெளிக்கொணரும்வகையில் சொத்துக் கணக்கெடுப்பை முயற்சிக்க வேண்டும். இன்போசிஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட மென்பொருளின் உதவியுடன் இவற்றை ஆய்வு செய்யலாம். இன்போசிஸ் நிறுவனம் புவித் தகவல் முறையின் மென்பொருளினை இலவசமாக பெங்களூர் மாநகராட்சிக்கு வழங்கியுள்ளதால், இதுபோன்ற முயற்சியினை மேற்கொண்டு நமது மாநிலத்திலுள்ள மாநகராட்சிகளுக்கும் புவித் தகவல் முறையின் மென்பொருளை மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து இலவசமாகப் பெற்று சொத்துக் கணக்கெடுப்பு முறையைச் செயல்படுத்தலாம்.

18. பிற நகராட்சிகளில், பண்ருட்டி நகராட்சியினைப் போன்று கணினி பொருத்தப்பட்ட நடமாடும் ஊர்தி மற்றும் செல்லிடத் தொலைபேசியினை தொடர்ந்து பயன்படுத்தி சொத்துவரி நிலுவைத் தொகைகளை வசூல் செய்யலாம். மேலும், பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனம் செய்வதைப்போன்று பெரிய நகராட்சிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக வரிகளை வசூல் செய்ய முயற்சிக்கலாம். மேலும் வரவு அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் மூலம் வரி செலுத்தும் முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிகப்படியான வரிவசூல் அடையலாம். மேற்படி நடவடிக்கைகளை முயற்சிக்கும் ஒவ்வொரு நிலையிலும் பணம் செலுத்துதலை சரிபார்ப்பு செய்ய வேண்டும். இது வரி வசூலில் ஏற்படுத்தும் சீர்திருத்தங்கள் பின்னாளில் பிரச்சனைகளை உருவாக்குவதைத் தவிர்க்கும்.

19. வரிவசூல் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் (III) உதவியுடன் மின்–ஆளுமைத் திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம். இதனால் அனைத்துத் திட்டங்களும் பொதுமக்கள் அணுகத்தக்க வகையில் இருக்கும்.

**20.** **1998–**ம் வருடத்திற்கு முந்தைய மற்றும் **1998 –** ம் ஆண்டுக்குப் பிந்தைய சொத்து வரி விதிப்புகளுக்கிடையேயுள்ள மிகப்பெரிய இடைவெளியினை அடுத்த இரண்டு அல்லது மூன்று வரிச் சீராய்வுகளில் சரி செய்யலாம். அதே சமயத்தில், கட்டிடங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வயது வரம்புச் சலுகையினை அதிகரிக்கலாம். இதனால் சம்மந்தப்பட்ட கட்டிடத்தின் வயதைப் பொறுத்து நேரடியாக வரிக் குறைப்புச் செய்ய முடியும்.

**21.** நகராட்சிகளில் வரி விதிப்பு மேல்முறையீட்டுக்குழுவையும் மாநகராட்சிகளில் வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தையும் அமைப்பதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள **1998–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் உள்ள விதிமுறைகளை, நடைமுறையிலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் சட்டத்தில் சேர்த்து, மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் பொழுதே நிலுவைத் தொகைகள் முழுவதையும் செலுத்துவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தலாம். மேற்கொண்டும் மேல்முறையீடு செய்யப்படும் நேர்வுகளில், வரி தொடர்ந்து செலுத்தப்படவேண்டும். எஞ்சிய / குறைவாக வசூல் செய்யப்பட்ட தொகையினை எதிர்காலத்தில் செலுத்தப்படும் தொகையில் சரிக்கட்டலாம். இதனால், காலங்கடந்த வரிக்கேட்புகளை வசூல் செய்வதில் ஏற்படும் இடர்பாடுகளை அகற்றமுடியும்.

**22.** அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் வரி நிர்வாக முறையினை எளிதாகவும் வெளிப்படையானதாகவும் செய்யும் பொருட்டு, சுய அறிவிப்புத் திட்ட **(Self declaration)** முறையினை அறிமுகப்படுத்தலாம். தவறுதலான மற்றும் வெளிப்படையாகவே குறைவாக மதிப்பிடப்பட்ட வரிவிதிப்புகள்மீது தண்டத் தொகை விதித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**23.** தற்போதைய நிலையில், திட்டமிடல் / கட்டிட அனுமதியளிக்கும் பிரிவு மற்றும் வருவாய்ப் பிரிவு ஆகியவைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லை. இதன் விளைவாக வருவாய் இழப்பு ஏற்படுகிறது. கணினி மூலம் இப்பிரிவுகளை இணைப்பதால் வருவாய் இழப்பைச் சரிசெய்ய முடியும். அதாவது, கட்டிட உரிமம் முடிவடையும் தருவாயில் தானாகவே வரி விதிப்பை மேற்கொள்ள முடியும்.

24. புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்ட விவரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாதந்தோறும் தமிழ்நாடு மின்சார வாரியம் அளிக்கவேண்டும். இதனால், கட்டிட உரிமக் காலம் முடிவடையும் வரை காத்திராமல், புதிய சொத்துக்களை வரி விதிப்பின் கீழ் உடனடியாகக்கொண்டுவருவதற்கு வருவாய்த்துறை விழிப்புடன் இருக்க இயலும்.

25. ஒவ்வொரு பகுதியிலும் புதிதாக நடைபெறும் கட்டுமானப்பணிகளை அடையாளம் காணும் பணியினை தகவல்களை சேகரிப்பதற்குத் தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கலாம். இதன்மூலம் புதிய கட்டிடங்களுக்கு நகராட்சி / மாநகராட்சிகளிடம் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க இயலும். இவ்விசயத்தை தெளிவாக ஆய்வு செய்த பின்னர் தனியார் நிறுவனங்களின் பங்குப் பணிகுறித்து, நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முடிவு செய்யலாம்.

26. அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளிலுள்ள சொத்துகளுக்கு வரி விதிப்பது சம்மந்தமாக தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## தொழில்வரி

27. மாத ஊதியம் பெறுபவர்களுக்கு வருமான அடிப்படையிலான தொழில் வரி வீதங்கள் கீழ்க் கண்டவாறு திருத்தப்படலாம். மேலும், உயர்ந்த வருமானப் பிரிவுகளில் உள்ளோர் உயர்ந்த அளவில் வரி செலுத்தும் வகையில் அவ்வீதங்கள் அமைய வேண்டும். அரையாண்டு வருமான நிலைகள் கீழ்க் கண்டவாறு இருக்க வேண்டும்.

### தொழில் வரி

| வ.எண் | சராசரி அரையாண்டு வருமான நிலைகள் | 35 சதவீதம் உயர்த்திய பின்னர் செலுத்தவேண்டிய தொழில்வரி |
|---|---|---|
| 1 | ரூ 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ 21,001 முதல் ரூ 30,000 வரை | ரூ150 |
| 3 | ரூ 30,001 முதல் ரூ 45,000 வரை | ரூ 275 |
| 4 | ரூ 45,001 முதல் ரூ 60,000 வரை | ரூ550 |
| 5 | ரூ 60,001 முதல் ரூ 75,000 வரை | ரூ 825 |
| 6 | ரூ 75,001 முதல் ரூ 1,50,000 வரை | ரூ 900 |
| 7 | ரூ 1,50,001 முதல் ரூ 1,75,000 வரை | ரூ 975 |

| | | |
|---|---|---|
| 8 | ரூ 1,75,000 முதல் ரூ 2,00,000 வரை | ரூ 1,050 |
| 9 | ரூ 2,00,001 முதல் ரூ 2,50,000 வரை | ரூ 1,125 |
| 10 | ரூ 2,50,000 க்கு மேல் | ரூ1,250 |

மேலே குறிப்பிட்டுள்ள வரி விகிதம் 01.10.2008 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படலாம். அக்டோபர் 2008–ல் வரித் திருத்தம் செய்த பின்னர் அடுத்துவரும் காலங்களில் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை வரித் திருத்தம் செய்யலாம். சம்மந்தப்பட்ட சட்டத்தில் உள்ள உச்சவரம்பு மீதான விதி முறைகள் நீக்கப்பட வேண்டும். தொழில் வரி வீதங்களுக்கான உச்ச வரம்பு அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 276–ல் உள்ள வழிவகைகளின் படி இருக்க வேண்டும்.

28. தொழிற்சாலைகளுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் விதிக்கப்படும் தொழில்வரி உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ.2,500 ஆக இருக்கலாம் என்ற இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையை அரசு 2002–ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. அரசு 01.4.2007 முதல் இதனை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆணைகளை பிறப்பிக்கலாம்.

29.(அ) வியாபாரிகள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு மொத்த விற்பனையின் அளவை கருத்திற்கொண்டு தொழில்வரி விதிக்கலாம். கீழே கண்ட அட்டவணையின்படி வரிவிதிப்பை மேற்கொள்ளலாம்:

| வ.எண் | அரையாண்டு மொத்த விற்பனை | அரையாண்டு வரி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | ஒரு இலட்சத்திற்கும் குறைவாக | இல்லை |
| 2 | ஒரு இலட்சம் அல்லது அதற்குமேலாக ஆனால் ரூ. 2 இலட்சத்துக்குக் குறைவாக | 100 |
| 3 | ரூ. 2 இலட்சம் அல்லது அதற்கு மேலாக ஆனால் ரூ.3 இலட்சத்துக்குக் குறைவாக | 200 |
| 4 | ரூ.3 இலட்சம் அல்லது அதற்கு மேலாக ஆனால் ரூ.5 இலட்சத்துக்குக் குறைவாக | 350 |
| 5 | ரூ.5 இலட்சம் அல்லது அதற்கு மேலாக ஆனால் ரூ.7.50 இலட்சத்துக்குக் குறைவாக | 500 |
| 6 | ரூ.7.50 இலட்சம் அதற்கு மேலாக ஆனால் ரூ.10 இலட்சத்துக்குக் குறைவாக | 650 |
| 7 | ரூ.10 இலட்சம் அல்லது அதற்கு மேலாக ஆனால் ரூ 15 இலட்சத்துக்குக் குறைவாக | 850 |

| | | |
|---|---|---|
| 8 | ரூ.15 இலட்சம் அல்லது அதற்கு மேலாக ஆனால் ரூ.20 இலட்சத்துக்குக் குறைவாக | 1,050 |
| 9 | ரூ.20 இலட்சம் அல்லது அதற்கு மேலாக | 1,250 |

29.(ஆ) வணிகவரித்துறை, வணிகர்களுக்கு மதிப்பீட்டு சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு தொழில் வரியைச் செலுத்த வலியுறுத்தவேண்டும். அப்பொழுதுதான் அவர்களையும் தொழில்வரி விதிப்பின் கீழ் கொண்டுவரமுடியும். வரி செலுத்தத் தவறுபவர்களை விதிகளை மீறுபவர்களாகக் கருதி அவர்களுடைய வணிகத்தொழில் பதிவை ரத்து செய்யலாம்.

30. விற்பனை வரி மதிப்பீடுகளின் கீழ் வராத வணிகர்களைப் பொறுத்தமட்டில் உள்ளாட்சி அமைப்புகள் அப்படிப்பட்ட வணிகர்கள் உரிமத்தை புதுப்பிக்க வரும்போது தொழில்வரி செலுத்துவது குறித்து அறிவுறுத்தலாம். தொழில் வரியைச் செலுத்த தவறுபவர்களின் உரிமத்தை ரத்து செய்யவும், கடைகளை மூடவும் சொத்துக்களை கைப்பற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உள்ளது.

31. தனியாகத் தொழில் புரிவோர் மற்றும் சுய தொழில் புரிவோர்களுக்கு கர்நாடகம் மற்றும் கேரளா மாநிலங்களைப்போன்று பணி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தொழில்வரி விதித்து வசூலிக்கலாம். அத்தகைய தொழில்வரி வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.:

| வ.எண் | அனுபவம் | அரையாண்டு தொழில் வரி |
|---|---|---|
| 1 | 5 வருடங்கள் வரை தொழில் அனுபவம் | அரையாண்டிற்கு ரூ 500 |
| 2 | 5 வருடத்திற்கு மேல் 10 வருடங்களுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்கள் | அரையாண்டிற்கு ரூ 800 |
| 3 | 10 வருடத்திற்கு மேல் 15 வருடங்களுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்கள் | அரையாண்டிற்கு ரூ 1040 |
| 4 | 15 வருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவர்கள் | அரையாண்டிற்கு ரூ 1250 |

32. மேலே குறிப்பிட்ட முறைகளில் ஆண்டு வருமானம் எதிலும் வராத நபர்களுக்கு ஒவ்வொரு வருமானவரி அலுவலகத்திடமிருந்தும் அந்தப்பகுதியிலுள்ள மாதஊதியம் பெறாத நபர்களின் வருவாய் அளவைத் தருமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுகொள்ளவேண்டும். இந்த விவரங்களைப் பெறுவதினால் அவர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்

தொழில்வரியை கணக்கிட்டுப் பெற ஏதுவாக இருக்கும். ஒருவேளை வருமான வரி அலுவலர்களுக்கு மத்திய அரசு எந்த ஒரு ஆணையையும் தரவில்லை என்றால் மேற்சொன்ன நபர்களின் வருவாய் விவரத்தை தெரிவிக்குமாறு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் அடிப்படையில் வருமானவரி அலவலகங்களிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகள் தகவலை கேட்டுப்பெற்று நடவடிக்கை எடுக்கலாம்.

**குடிநீர் வரி / கழிவு நீர் வரி**

**33.** சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தைத் தவிர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தனியாக குடிநீர் வரி / கழிவு நீர் வரியை வசூலிக்கத் தேவையில்லை.

**கல்வி வரி**

**34.** சொத்துவரியில் இத்தனை விழுக்காடு கல்வி வரி என்பதைக் காட்டிலும், ஆண்டு வாடகை மதிப்பில் 2 1/2 சதவிகிதம் அல்லது வேறு ஏதேனும் விகிதத்தில் கல்வி வரி தொடர்ந்து விதிக்கப்படலாம்.

**35.** கல்வி வரி மூலம் பெறப்படும் வருவாயை பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த பயன்படுத்துவதுடன் ஓய்வு பெற்ற நகராட்சி ஆசிரியர்களின் ஓய்வூதியம் மற்றும் அதனைச் சார்ந்த இதர சலுகைகளை வழங்குவதற்கும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் பயன்படுத்தவேண்டும்.

**அடிமனை (காலிமனை) வரி (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்)**

**36.** 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளில் (தற்போது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது) விதி எண் 114 –ல் குறிப்பிட்டுள்ளபடி காலிமனைப் பரப்புடன் இணைந்த சதுர அடிக்கான வீதத்தில் நிர்ணயம் செய்த தொகையை வசூல் செய்ய வகைசெய்யும் விதிமுறைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சட்டம் அல்லது புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை தற்பொழுது நடைமுறையில் உள்ள சட்டத்தில் உரியவாறு சேர்த்து திருத்தி அமைக்கலாம்.

ஒரு சதுர அடிக்கு

| காலிமனை அமையப் பெற்ற இடம் | | முதல் நிலை<br>சென்னை மாநகராட்சி | | இரண்டாம் நிலை<br>இதர மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு / தேர்வு நிலை நகராட்சிகள் | | மூன்றாம் நிலை<br>முதல் மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் | | நான்காம் நிலை<br>பேரூராட்சிகள் மற்றும் இதர இடைப்பட்ட நகரியப் பகுதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் ரூ. பை | அதிக பட்சம் ரூ. பை | குறைந்த பட்சம் ரூ. பை | அதிக பட்சம் ரூ. பை | குறைந்த பட்சம் ரூ. பை | அதிக பட்சம் ரூ. பை | குறைந்த பட்சம் ரூ. பை | அதிக பட்சம் ரூ. பை |
| அ) | குடியிருப்புப் பகுதியில் உள்ள தெருக்கள் | 0.30 | 0.50 | 0.20 | 0.40 | 0.15 | 0.30 | 0.10 | 0.20 |
| ஆ) | பிரதான சாலை மற்றும் மூலப் பிரதான சாலைகளை இணைக்காத பேருந்து வழித்தடங்களைச் சார்ந்த சாலைகள் | 0.40 | 0.75 | 0.30 | 0.50 | 0.20 | 0.40 | 0.15 | 0.30 |
| இ) | மூலப் பிரதான சாலை, பிரதான சாலை மற்றும் பேருந்து வழித்தடங்களால் மூலப் பிரதான சாலைகளை இணைக்கும் பேருந்து வழித்தடங்கள் | 0.50 | 1.50 | 0.40 | 0.60 | 0.30 | 0.50 | 0.20 | 0.40 |

37. வரி செலுத்துவோர் அதிகமாக பாதிக்கப்படாத வகையில் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வரிவீதங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்வதற்கான அதிகாரங்களை நகராட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும் .

பய**ணியர்** வரி

38. பயணியர் வரி விதிக்க அரசு பின்வரும் இடங்களை அடையாளங்கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் :

(அ) விடுமுறை சுற்றுலாத்தலங்கள்

(ஆ) ஆலய / சுற்றுலா நகரங்கள்

(இ) தொல்பொருள் / வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

இவ்வாறு அடையாளம் காணப்படும் இடங்களுக்கு வரும் அரசிற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் அரசுப்போக்குவரத்துக் கழகங்களின் வாகனங்கள் உட்பட எல்லா வாகனங்களுக்கும் பின்வருமாறு நகராட்சி மன்றங்கள் பயணியர் வரி விதிக்கலாம் :

| | |
|---|---|
| மிதிவண்டிகள் | – வரி இல்லை |
| இருசக்கர வண்டிகள் | – ரூ 5/– |
| தனியார் சீருந்து / சுற்றுலா சீருந்து | – ஒரு பயணத்திற்கு ரூ 10ல் இருந்து ரூ 25/– வரை |
| கூண்டு உந்து (Van) / சுமை உந்து ( Lorry) | – ஒரு பயணத்திற்கு ரூ 25/–ல் இருந்து ரூ 50/–வரை |
| சுற்றுலாப் பேருந்துகள் (அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் உட்பட) | – ஒரு பயணத்திற்கு ரூ 50/–ல் இருந்து ரூ 75/– வரை |

39. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், வரி செலுத்தாத அரசு முகமைகளைப் பற்றிய விவரங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அல்லது அரசுக்குத் தெரிவித்து, வரி வசூலிப்பதற்கான தகுந்த ஆணைகளைப் பெற வேண்டும்.

40. இராமேஸ்வரத்தில் செய்யப்படுவதுபோல மற்ற இடங்களிலும், இரயில்வே துறை பயணியர் வரியை வசூலித்து உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்.

**விளம்பர வரி (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்)**

41. 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகள் 285(C) மற்றும் 285(CC), சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவுகள் 326 (C) மற்றும் 326 (CC) மற்றும் இதர மாநகராட்சிகள் சட்டங்களில், 19வது தமிழ்நாடு சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும். 2003ல் சட்டத் திருத்தம் செய்வதற்கு முன், உருவாக்கப்பட்ட விதிமுறைகளே மீண்டும் மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் ஏனைய மாநகராட்சிகள் சட்டத்திலும் கொண்டு வரப்பட வேண்டும்.

42. 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 107(A) மற்றும் 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவு 129 (A) மற்றும் பிற மாநகராட்சிச் சட்டங்களில் ஏற்கெனவே உள்ள விளம்பர வரி சம்பந்தமான விதிமுறைகளில், விளக்குக் கம்பங்கள்/ தொலைபேசிக் கம்பங்கள், சுவரில் ஒட்டப்படும் விளம்பரங்கள், சுவரில் / சுற்றுச் சுவரில் எழுதப்படும் விளம்பரங்கள், பேருந்துகள் மற்றும் வாகனங்கள் மூலம் செய்யப்படும் விளம்பரங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கும் வகையில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

43. திரையரங்குகளில் சினிமா ஸ்லைடு மூலம் காண்பிக்கப்படும் விளம்பரங்கள் மீது அரசால் விதிக்கப்பட்டிருந்த வரி பிறகு நிறுத்தப்பட்டு விட்டது. இந்த சினிமா ஸ்லைடு விளம்பரங்கள் மீது மீண்டும் வரி விதிக்கப்படவேண்டும். அத்தகைய வரி விதிக்கும் அதிகாரம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

**44.** விளம்பரங்களுக்கான உரிமக் கட்டணங்கள் மற்றும் விளம்பர வரி வீதங்கள் 2007–08ம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட வேண்டும். தேவை ஏற்பட்டால், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் (தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது) குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை (1)ஐ அடிப்படையாகக் கொண்டு வரிவீதங்களைத் திருத்தி அமைக்கலாம்.

**45.** ஜுன் 2003 முதல் 2006 வரை அல்லது அதற்கு மேலும் அரசுக் கணக்கில் மாவட்ட ஆட்சியாளர்களால் செலுத்தப்பட்ட விளம்பர உரிமக் கட்டணங்கள் மற்றும் விளம்பர வரிகள், அரசு கடித எண் 26510/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை /2003–2 நாள் 16.03.2004ன்படி சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்கென, மாநில அரசின் வருவாய்க்கணக்கில் கீழ்க்கண்டவாறு புதிதாக ஒரு கணக்குத் தலைப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும்:

“ 0075 – சில்லறை வரவுகள் – விளம்பர வரியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கினைப் பகிர்ந்தளித்தல்”

**46.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைக்குள் வரும் விளம்பரப் பலகைகளுக்கு அவற்றின் அளவு மற்றும் வகைகளைக் கணக்கில் கொண்டு ஒரே மாதிரியான வரி விதிப்பை மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில் அனைத்து விளம்பர பலகைகளின் இருப்பு நிலைக் கணக்கினைப் பராமரிக்க அறிவுறுத்தப்பட வேண்டும். தனியாருக்குச் சொந்தமில்லாத நிலத்தில் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளின் மீது அதன் அருகாமையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் வரி விதிப்பு மேற்கொள்ளவேண்டும்..

**கம்பிவடத் தொலைக்காட்சி மீதான வரி**

47. 2003 ஆம் ஆண்டு, 23 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை, கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களிடம், கம்பிவடத் தொலைக்காட்சி மீதான வரியாக விதித்து வசூல் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்குப் பதிலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

48. 2003 முதல் 2006 வரை கம்பிவடத் தொலைக்காட்சி வரியாக வசூல் செய்யப்பட்ட தொகை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2007–2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட வேண்டும். கால தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், (வசூல் தொகையில் வசூலிப்பதற்காக இருத்திக் கொள்ளும் வசூல் கட்டணம் உட்பட எந்தவித பிடித்தமும் இன்றி) மொத்தத் தொகையும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படவேண்டும்.

49. அரசாணை நிலை எண் 9, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 18.1.1999-ன்படி கம்பி வடத் தொலைக்காட்சி இயக்குபவர்களிடமிருந்து பிணைய வைப்புத் தொகையாக ரூ 10,000/–ஐ வசூல் செய்வதற்கு கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படலாம்.

**கம்பி வடத் தொலைக்காட்சிக்கான தட வாடகை**

50. கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களிடமிருந்து, கம்பிவடத் தொலைக்காட்சிக்கான தட வாடகையை சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் குறிப்பிட்ட வீதத்தில் நடப்பு ஆண்டிற்கும் மற்றும் கடந்த காலங்களுக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கலாம்.

51. கம்பிவடத் தொலைக்காட்சிக்கான தடவாடகை 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், தட வாடகை வீதங்களை 2007 –2008 ஆம் நிதியாண்டில் திருத்தி அமைக்கலாம். 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தட வாடகையைத் திருத்தி அமைக்க, மேலே குறிப்பிட்ட அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அவை செயல்படுத்த வேண்டும்.

**குடிநீர் மற்றும் கழிவு நீர் கட்டணங்கள் (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்)**

52. அளவு மானி (Meter) இல்லாத நுகர்வோருக்கான குடிநீர் கட்டணத்தை 5 முதல் 10 சதவீதம் வரை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அதிகரிக்க வேண்டும். நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலம் முடிவடைவதற்குள் 25 சதவீத உயர்வு இருக்க வேண்டும்.

53. அளவு மானி (Meter) பொருத்தப்பட்ட இணைப்புகளுக்கும், நுகரப்படும் குடிநீர் அளவினை கணக்கில் எடுத்துக்கொண்டு, அளவு மானி இல்லாத இணைப்பிற்கான கட்டண வீதங்களுக்குக் குறையாமல் வரிவிதிப்பு செய்ய வேண்டும்.

54. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 01.04.2007 முதல் குடிநீர்கட்டணத்தை 30 சதவீதம் உயர்த்த வேண்டும். அதற்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டதைப்போல் ஆண்டுதோறும் கட்டணவீதங்களை குறிப்பிட்ட அளவில் உயர்த்த வேண்டும்.

55. எந்தெந்த நகராட்சிகள் / பேரூராட்சிகள் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு உயர் அளவிலான மாறுபட்ட கட்டண வீதங்களைப் பின்பற்றவில்லையோ, அத்தகைய அனைத்து நிருவனங்கள் மீது, வீட்டு இணைப்புகளுக்குப் பொருந்தக்கூடிய கட்டண வீதங்களைப்போல் இரண்டு/ மூன்று மடங்கு கட்டணங்களை விதிக்க வேண்டும். இதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும்.

56. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் முடிவடைவதற்குள், அதாவது 2011 – 2012க்குள், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படவேண்டிய பராமரிப்புக் கட்டணம் உட்பட அனைத்து குடிநீர் செலவினங்கள் மற்றும் குடிநீர்த் திட்டத்திற்கென பயன்படுத்தப்பட்ட கடன் தொகைக்கான வட்டி ஆகியவற்றை, சென்னை தவிர இதர மாநகராட்சிகள் 100 சதவீதமும் இதர நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் 90 சதவீதமும் குடிநீர்க் கட்டணங்கள் மூலமாக மீளப்பெற வேண்டும். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் குடிநீர் வீதங்கள், குடிநீர் வழங்கலுக்கான வருவாய்க்கணக்கு செலவினங்களை எதிர்கொள்வது மற்றும் வருடாந்திர கடன் தவணைகளைச் செலுத்திய பிறகு உள்ள மிகைத் தொகையை மூலதனத் தேவைகளுக்கென முதலீடு செய்யலாம்.

**உரிமம் மற்றும் கட்டணங்கள்**

57. தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம்/விதிகள் 2000 – ல் உள்ளபடி தொழில் புரிவதற்கான உரிமம்

வழங்கும் முறையினை நடைமுறையிலுள்ள நகராட்சிகள் சட்டத்தில் சேர்த்து திருத்தப்பட்ட வீதங்களை 2007 – 2008 – ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தவேண்டும்.

**குத்தகை வருவாய்**

**58.** குத்தகை மதிப்புக்கான நிபந்தனைகளை வலுப்படுத்தி நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். குத்தகைக் காலத்தை புதுப்பிப்பதிலுள்ள தடங்கல்களை நீக்கி, காலதாமதத்தை பொருட்படுத்தாது விடுவதற்கும் தாமதமாக செலுத்தப்படும் குத்தகைத் தொகைக்கு அபராத வட்டி விதிப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும்..

**59.** குத்தகைதாரர்கள் இல்லாத காரணத்தால் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பயனின்றி இருக்கும் சொத்துக்களை, கடன்களை திருப்பிச் செலுத்தும் பொருட்டு விற்று விடலாம்.

**60.** **2000–** ம் ஆண்டில் நூறுக்கும் மேற்பட்ட உழவர் சந்தைகள் அமைப்பதற்காக தமிழ்நாடு வேளாண் விற்பனைக் குழுவால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் / சந்தைகளுக்கான குத்தகைத் தொகையை குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நாள் முதல் அரசு நிர்ணயித்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாய், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு சம்பந்தப்பட்ட தமிழ்நாடு வேளாண் விற்பனைக் குழுவால் அளிக்கப்பட வேண்டும்.

**கண்ணாடி இழைக் கம்பி வடக்குழாய் பதிப்பிற்கான தட வாடகை (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்)**

**61.** **1999**ஆம் ஆண்டில் உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி (AIR 1999 SC 1734) பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனம் (BSNL) மத்திய அரசின் துறையிலிருந்து வேறுபடுத்தப்பட்டு தனிப்பட்ட நிறுவனமாக ஆனதால், இதர நிறுவனங்களின் கண்ணாடி இழைக் கம்பி வடக்குழாய்களுக்கு விதிப்பதைப்போன்று, பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தின் கண்ணாடி இழைக்கம்பி வடக்குழாய் பதிப்பிற்கும் தடவாடகை வசூலிக்கப்பட வேண்டும்..

**வண்டி நிறுத்தக் கட்டணங்கள்**

**62.** அனைத்து மாநகராட்சிகளிலும் வியாபாரம் நடைபெறும் இடங்களில் வண்டிகள் நிறுத்தும் இடங்களுக்கான பகுதிகளைக் கண்டறிந்து வண்டி நிறுத்தும் இடங்களை உருவாக்க

வேண்டும். மாநகராட்சி மன்றம் இதற்கென நிர்ணயித்த கட்டணங்கள் வண்டியின் உரிமையாளரிடம் வசூலிக்கப்படவேண்டும்.

63. வண்டி நிறுத்த போதுமான இடம் இல்லாத அல்லது இடமே இல்லாத வர்த்தக நிறுவனங்களிடமிருந்து சிறப்புத் தொகை வசூலித்து அதன் மூலம் வரும் நிதி பொது வண்டி நிறுத்துமிடங்களை உருவாக்க / மேம்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும்.

64. ஏற்கெனவே சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள பல அடுக்கு மாடி வண்டி நிறுத்தக்கூடம் போன்று சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல அடுக்கு மாடி வண்டி நிறுத்தக் கூடங்கள் உருவாக்கப்பட வேண்டும்; இது சென்னை மாநகராட்சிக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதுடன் நகரை மேம்படுத்துவதற்கான நிதி ஆதாரமாகவும் அமையும்.

அனுமதியளிக்கப்படாத மனைப்பிரிவுகள்

65. அரசு ஆணை (நிலை) எண் 59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.07.2006ல் கூறப்பட்டுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் அனுமதியளிக்கப்படாத மனைப்பிரிவுகள் என்ற பிரச்னைகள் அகற்றப்பட்டுவிடும்.

66. பி–மெம்மோவில் அனுமதியளிக்கப்பட்ட காலவரையறைக்குள் ஆட்சேபணை இல்லாத புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு வரி விதிப்பதற்கு அரசு பரிசீலிக்கலாம்.

67. புறம்போக்கு நிலத்தில் உள்ள ஆட்சேபணைக்குரிய கட்டிடங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டபடி அகற்றவும் அத்தகைய நிலங்களை மீட்டு பொது உபயோகத்திற்கு பயன்படுத்துவதற்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத்துறைகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

68. அனுமதியளிக்கப்படாத மனைப்பிரிவுகள் தோன்றுவதை கட்டுப்படுத்த, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று இந்த ஆணையம் கருதுகிறது:

அ) அனுமதியளிக்கப்படாத மனைப்பிரிவுகளை உருவாக்குபவரிடம் தண்டத் தொகை வசூலிக்கப்படவேண்டும். மேலும் அத்தகைய மனைப்பிரிவுகளில் கட்டப்படும் கட்டிடங்கள் இடித்துத் தள்ளப்படவேண்டும்.

ஆ) புதிய கட்டிடங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்குவதற்கு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெற்ற பிறகே மின் இணைப்புகள் வழங்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவுறுத்தப் படவேண்டும்.

இ) அனுமதியளிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள காலி மனைகளுக்கும் காலி மனை வரி விதிக்கப்படவேண்டும்.

**வீட்டுவரி**

**69.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இருப்பதைப்போன்று மூலதன மதிப்பு அடிப்படையிலிருந்து அடிமனைப்பரப்பு ஆண்டு வாடகை மதிப்பு அடிப்படைக்கு படிப்படியாக மாற்றம் மேற்கொள்ளலாம். முதலாவதாக பேரூராட்சியாகவோ / நகராட்சியாகவோ மேம்படுத்தப்படக்கூடிய மக்கட் தொகை கணக்கெடுப்பு அடிப்படை நகரங்களாக (Census towns) வகைப்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஆண்டு வாடகை மதிப்பு அடிப்படைக்கு மாறலாம். இரண்டாவதாக, நகர்ப்புறங்களுக்கு அருகாமையில் உள்ள கிராம ஊராட்சிகள், அடிமனைப்பரப்பின் அடிப்படையிலான ஆண்டு வாடகை மதிப்பு அடிப்படைக்கு மாறலாம். மூன்றாவதாக மற்ற கிராம ஊராட்சிகளும் மேற்கண்ட முறைக்கு மாறலாம். இந்த மூன்று நிலைகளிலும் செய்யப்படும் மாற்றங்கள் ஐந்தாண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

**70.** அடிமனைப் பரப்பு அடிப்படையில் வரி விதிப்பு அறிமுகப்படுத்தப்படும் வரையில், கிராம ஊராட்சி செயல் அலுவலர்களான கிராம ஊராட்சித் தலைவர்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி மூலதன மதிப்பினை நிர்ணயிப்பதாக களஅறிக்கைகள் தெரிவிப்பதால், மூலதன மதிப்பினை நிர்ணயிப்பதற்கான கோட்பாடுகள் வரையறுக்கப்பட வேண்டும். கூரை வேயப்பட்ட வீடுகள், ஓடு போடப்பட்ட வீடுகள், மாடி வீடுகள் ஆர்.சி.சி மேல் தளம் போடப்பட்ட வீடுகள் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு பத்து அடிக்கும் மூலதன மதிப்பு ஊராட்சிகளின் ஆய்வாளர் அல்லது அவரால் உருவாக்கப்பட்ட குழுவினால் நிர்ணயிக்கப்பட வேண்டும். கட்டிட வேலைக்கான செலவினம்

அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதால், ஒரே கோட்பாட்டினை அனைத்து கிராம ஊராட்சிகளும் கடைப்பிடிக்க வேண்டும்.

71. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் உள்ளதைப்போல, வணிக ரீதியான கட்டிடங்கள், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், திரையரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டிடங்களுக்கு வீட்டுவரியை இரண்டிலிருந்து மூன்று மடங்கு வரை நிர்ணயிக்கலாம்.

72. 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 172 ன் கீழ் உள்ள அட்டவணை I க்கு சட்டத் திருத்தம் கொண்டுவருவதன் மூலம் மேல்வரி விதிக்கப்படும் தற்போதுள்ள நடைமுறையினை மாற்றலாம்.

73. கட்டணம் வசூலிக்கும் கல்வி நிறுவனங்களான நர்சரி பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், போதனைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவ / பல் மருத்துவ கல்லூரிகள் மற்றும் பயிற்றுவிப்பு நிலையங்களும் வீட்டு வரி விதிப்புக்கு உட்படுத்தப்படவேண்டும்.

74. வீட்டு வரி கணக்கிடுதலில் உள்ள குழப்பத்தை நீக்க கட்டிடங்களை அளவிடுதற்கான அலகு சதுர டெசி மீட்டருக்குப் பதிலாக சதுர மீட்டராக இருக்கும் வகையில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் அட்டவணை 1 திருத்தப்பட வேண்டும்.

75. நலிவடைந்த பிரிவினருக்கான அரசின் பல்வேறு திட்டங்களான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் / இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் மற்றும் சமத்துவபுரத்தில் உள்ள வீடுகளும் மற்ற வீடுகளைப்போல் வீட்டு வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

76. கிராம ஊராட்சிகளின் ஆய்வாளர் பொது வரிச்சீராய்வினை தள்ளி வைக்க இயலச் செய்கின்ற 1994–ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவதன் மூலம் விதி எண் 14 ஐ நீக்கம் செய்யலாம்.

77. மக்கள் நலப்பணியாளர்களையும் கிராம ஊராட்சிகளில் காலமுறை ஊதிய அடிப்படைக்கு மாற்றப்பட்டுள்ள கிராம ஊராட்சி எழுத்தர்கள் மற்றும் பகுதி நேர

உதவியாளர்களையும் முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலம் கிராம ஊராட்சிகளில் வரி வசூலிக்கும் அமைப்பினை வலுப்படுத்த வேண்டும்.

**குடிநீர்க்கட்டணங்கள் (ஊரக உள்ளாட்சி அமைப்புகள்)**

**78.** வீடுகளுக்கு குடிநீருக்கான குறைந்த அளவு மாதக் கட்டணத்தை ரூ **30** யிலேயே இருத்தி வைக்கலாம். குடிநீர் கட்டணத்திற்கு அதிகபட்ச வரம்பு எதையும் நிர்ணயிக்கத் தேவையில்லை. குடிநீர் பராமரிப்புச் செலவினங்கள் அதிகமாகிக் கொண்டுவருவதால் குடிநீர் வீட்டு இணைப்பிற்கான மாதக்கட்டணத்தை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைத்து வசூல் செய்யவேண்டும்.

**79.** கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குடிநீர் இணைப்புகளிலிருந்து பயன்படுத்தப்படும் குடிநீரின் அளவைப் பொறுத்து ஒருகிலோலிட்டருக்கு கட்டணம் நிர்ணயித்து வசூல் செய்யவேண்டும்.

**அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணங்கள்**

**80.** **1994**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவுகள் **159** மற்றும் **160**ன் **(1999**ம் ஆண்டு திருத்தப்பட்டது.) கீழ் கிராம ஊராட்சிகள் உரிமம் வழங்க அதிகாரம் பெற்ற வணிகம் மற்றும் தொழில்களின் பட்டியலை அரசு அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு தரப்பட்ட வணிகத்திற்கும் தொழிலுக்கும் குறைந்தபட்ச மற்றும் உச்சவரம்பு உரிமக்கட்டணத்தை முதலில் அரசு நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு நிர்ணயிப்பதற்கு, முதலாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**81.** அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில் உரிமம் என்பது ஒரு பொருந்தாத சொல்வழக்காக இருப்பதால் அனைத்து வணிக மற்றும் தொழில் சார்ந்த நடவடிக்கைகளின் மீதான உரிமம் என்பதை உள்ளடக்கிய ஒரு சொல் வழக்கை உருவாக்கலாம். உதாரணமாக, ‘கிராமப்புற வணிகச் செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்குதல்’ போன்ற சொல்வழக்கினைப் பயன்படுத்தலாம்.

82. உரிமக்கட்டணம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரால், மாவட்ட அளவிலான அரசிதழில் அறிவிக்கப்பட்டு, மாற்றி அமைக்கப்படலாம்.

83. உரிமம் வழங்குவதில் எவ்வித சட்ட சிக்கலுமில்லாமல் இருப்பதற்காக, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவுகள் 159 மற்றும் 160ன்கீழ் விதிகள் வெளியிடத் தேவைப்பட்டால் உடனடியாக வெளியிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

84. மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெறப்படும் கருத்துருக்களுக்கேற்ப ஊரக வளர்ச்சி இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் உரிமம் வழங்குவதற்கான புதிய தொழில்கள் ஏதேனும் சேர்க்கப்படவேண்டுமென்றால் அவைகளைச் சேர்த்து அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

85. ஊரக வளர்ச்சி இயக்குநர், மாநில முழுமைக்கும் தொழில் வாரியாக வசூலிக்கப்படவேண்டிய உரிமக்கட்டண வசூலை பதிவு செய்து பராமரிப்பதற்கான பதிவேட்டின் மாதிரிப்படிவத்தை அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

86. உதவி இயக்குநர் (தணிக்கை) திடீர் சோதனை முறையில் தணிக்கை ஆய்வு செய்து அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழில்கள் அனைத்திற்கும் உரிமக்கட்டணம் வசூலிக்கப்படுகின்றதா என்பதை அறிய வேண்டும்.

**மீன்பாசிக் குத்தகை**

87. கிராம ஊராட்சிக் குளங்களிலிருந்து வசூலாகும் 100 சதவிகித மீன் பாசிக் குத்தகை வருவாய், கிராம ஊராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்.

88. ஊராட்சி ஒன்றிய ஏரிகளிலிருந்து வசூலாகும் மீன் பாசிக் குத்தகையில், 50 சதவிகித வருவாய் கிராம ஊராட்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும். மீதமுள்ள 50 சதவிகித வருவாயை ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

**89.** பொதுப்பணித்துறை ஏரிகளின் மீன் பாசி குத்தகை வருவாயில், **25** சதவிகிதத் தொகை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படலாம்.

**90.** இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் பெருமளவு பலன்களைப் பெறவும் ஏலம் நடத்துவதை உறுதி செய்யவும் பொருத்தமான மாற்று அமைப்பு முறை அவசியமாகிறது என்பதால் அப்பரிந்துரை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

**2 சி பட்டா மரங்கள்**

**91.** கிராம ஊராட்சிப் பகுதியில் காற்றினால் விழுந்துவிடும் மரங்களை ஏலம் விடுவதற்காக ஒரு குழு அமைக்க ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கை செய்யலாம்.

**92.** பட்டுப்போன மரங்களை விரைவாக விற்பதை உறுதி செய்யும் வகையிலும் கிராம ஊராட்சிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்திடும் வகையிலும், அம்மரங்களை அப்புறப்படுத்துவதற்கும் ஏலத்தில் விடுவதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் அளிக்கலாம்.

**சமூகக்காடுகள் மூலம் வரவுகள்**

**93.** சமூகக் காடுகள் மூலமான வருவாயில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகையை மாநில அரசின் வருவாய் குறித்த கணக்கில் (Revenue Receipts) வைக்க தனிப்பட்ட விளக்கத் தலைப்பு (Detailed Head) இருத்தல் வேண்டும்.

**94.** ஒவ்வொரு நிதி ஆண்டும் வனத் துறையின் வரவு–செலவுத் திட்டத்தில் சமூகக் காடுகள் மூலமான வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்; அவ்வொதுக்கீடு அந்த நிதியாண்டுக்குள்ளேயே சரிக்கட்டப்பட வேண்டும். மேலும், தொகை ஏதேனும் விடுபட்டுப் போயிருப்பின் அத்தொகை அடுத்த நிதியாண்டில் முழுமையாக சரிக்கட்டப்பட வேண்டும்.

**95.** **2000–**ம் ஆண்டு முதல் **2006 –**ம் ஆண்டுவரை சமூகக் காடுகள் மூலம் பெற்ற வருவாயை **2007–2008** ஆம் நிதியாண்டில், இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த

கோட்பாட்டின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 158, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 14.10.2004 –ன் படி சரிக்கட்டப்பட வேண்டும்.

96. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலத்தில், சமூகக் காடுகள் மூலமான வருவாயை, ஏற்கெனவே அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி மொத்த வரவுத் தொகையில் 50:50 என்ற விகிதத்தில் வனத்துறையும் உள்ளாட்சி அமைப்புகளும் பகிர்ந்துக் கொள்ள வேண்டும். 2007–2008 முதல் சமூகக் காடுகள் மூலமான வருவாய் அந்தந்த நிதியாண்டிலேயே சரிக்கட்டப்பட வேண்டும். இதில் தவறு ஏற்படுமாயின், உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய தொகைக்கு வனத்துறை வட்டி செலுத்த வேண்டும்.

97. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தெரிவித்துள்ளபடி, சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் தொடர்பான பொறுப்புகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்பட வேண்டும். இவ்வகையில், சமூகக் காடுகள் திட்டத்தின் மேம்பாட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள இயலும்.

**கேளிக்கை வரி**

98. 1997 முதல் 2002வரை மற்றும் 2002 முதல் 2006 வரையுள்ள ஆண்டுகளுக்கான கேளிக்கை வரி நிலுவைத் தொகைகள் 2007–08ல் அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரிக்கட்டப்பட வேண்டும்; தவறும் பட்சத்தில் தாமதகாலத்திற்கு அதிகபட்ச அளவிலான வட்டியைப் பெற உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமை உள்ளது.

99. சம்பந்தப்பட்ட துறையின் பணிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால், காலாண்டுக்கு ஒரு முறைக்குப் பதிலாக, மாதாமாதம் வசூலான தொகை அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரிக்கட்டப்பட வேண்டும்.

100. 01.4.2007 முதல் கேளிக்கை வரி வசூலில் 1 சதவீதத்தை வசூல் கட்டணமாக அரசு இருத்திக் கொள்ளலாம். மீதி 99 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படவேண்டும்.

**101.** உள்ளாட்சி அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளத்தக்க கேளிக்கை வரி வருவாய், அரசின் வரவு–செலவுத்திட்டத்தின் வருவாய்க் கணக்கில் சம்பந்தப்பட்ட துறையால் தனியே தெளிவாகக் காட்டப்பட வேண்டும். இது ‘ வருவாய்க் கணக்கில் கழிக்கவும் . திருப்பிச் செலுத்துபவை என்ற கணக்குத்தலைப்பின்கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படும் கேளிக்கை வரித் தொகைகளைச் சரிபார்க்க உதவும் .

**102.** கேளிக்கை வரி வீதத்தை அரசு குறைக்கும் போதெல்லாம் உள்ளாட்சி அமைப்புகளை கலந்தாலோசிக்க வேண்டும். மேலும், இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பு ஈடு செய்யப்பட வேண்டும்.

**முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி**

**103.** முத்திரைத்தாள் தீர்வை மேல்வரி வசூலுக்காக தனி விளக்கத் தலைப்பு கொடுக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. வசூலில் ஒருபகுதி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு சரிக்கட்டப்படுகிறது.

**104.** உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேர வேண்டிய தொகைள் மற்றும் 2002–2003 முதல் 2005–2006 வரை சரிக்கட்டப்பட்ட தொகைகள் ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் வேறுபாட்டினை கணக்கிட்டு அவற்றை உடனடியாக 2007–08 ல் சரிகட்டப்பட வேண்டும்.

**105.** வசூலிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை மீதானமேல்வரித்தொகைகள் தற்போது விதிக்கப்படும் வரி விகிதத்திற்கேற்ப கருதப்படுவதால் இவ்வரி வீதத்தை குறைக்கும் போதெல்லாம் அரசு உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்புதலைப் பெறவேண்டும். வரிக்குறைப்பு மேற்கொள்ளப்படுமானால், அதனால் ஏற்படும் வருவாய் இழப்பு வரிவீதக் குறைப்பிற்கு முந்தைய அளவிற்கு ஈடுசெய்யப்பட வேண்டும்.

106. நகர்ப்புறத்திற்கும் மற்றும் ஊரகத்திற்கும் வசூல் கட்டணத்தில் வேறுபாடு இருப்பது நியாயமில்லை. எனவே, முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரியில் ஒரு சதவீதத்தை நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வசூல் கட்டணமாக அரசு இருத்திக் கொள்ளலாம்..

107. முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி இந்த அத்தியாயத்தின் 63 –வது பத்தியில் குறிப்பிட்டுள்ள 5 இனங்களின் மீது இதர சொத்து இனங்களுக்கு விதிக்கப்படும் வரி வீதத்தில் ஏற்கெனவே அரசால் ஏற்றுக்கொண்டபடி விதிக்கப்பட வேண்டும்.

108. ஏற்கெனவே இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்தபடி ஊரகப்பகுதிகளுக்கான பங்கு மக்கட் தொகை அடிப்படையில் 50 சதவீதமும் மற்றும் வரி வசூலில் 50 சதவீதமும் இருக்க வேண்டும். இதற்காக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 175–வது பிரிவிற்கு திருத்தம் கொண்டுவர வேண்டும்.

109. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் வசூலிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல் வரி அடுத்த மாதம் 15–ம் தேதிக்குள் மாவட்டப் பதிவாளரால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாவட்ட ஆட்சியரால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சரிக்கட்டப்பட வேண்டும்.

தலவரி / தலமேல்வரி

110. ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளவாறு 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 167ம் பிரிவிற்குத் திருத்தம் செய்து தலவரியினை குறைந்த பட்சம் ரூ 2/– எனவும் தலவரியின் உச்ச வரம்பினை ரூ 1/–ல் இருந்து ரூ 3/– ஆகவும் உயர்த்தி விதிக்கலாம்.

111. தலமேல்வரியினை குறைந்தபட்சம் ரூ 5/–ல் இருந்து ரூ 10/– ஆக உயர்த்தலாம். 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 168 ஆவது பிரிவிற்கு தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம், ஊராட்சி ஒன்றியங்களே தலமேல் வரியினை மேலும் உயர்த்தி விதிக்க வழிவகை செய்யலாம்.

**112.** கணக்குகளில் ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதி செய்யும் பொருட்டு வரவு–செலவுத் திட்டத்தின் வருவாய்க் கணக்கில், நிலவரி / தலவரி / தலமேல் வரி வசூலினை கணக்கு வைப்பதற்கென தனியாக துணைத்தலைப்புகள் இருக்க வேண்டும். தலவரி / தல மேல் வரிகளை பிரித்தளிப்பதற்காக கீழ்க்குறிப்பிட்டுள்ள விரிவான கணக்குத் தலைப்புகளை செயல்படுத்த வேண்டும்;

| | |
|---|---|
| 0029 | நில வருவாய் |
| 101 | நிலவருவாய் AA அல்லது AH<br>நில வரி வசூல்<br>தலவரி வசூல்<br>தலமேல் வரி வசூல் |

அதேபோல், வருவாயை பிரித்தளிக்கும்போது

| | |
|---|---|
| 0029 101 A I | கிராம ஊராட்சிகளுக்கு<br>தலவரியினை பிரித்தளித்தல்<br>ஊராட்சி ஒன்றியங்களுக்கு<br>தலமேல் வரியினை பிரித்தளித்தல் |

**113.** ஒவ்வொரு பசலி ஆண்டுக்கான ஜமாபந்தியும் முடிவடைந்த பின்னர் செப்டம்பர் 15 தேதிக்குள் தலவரி/ தலமேல்வரிகள் சரிக்கட்டப்படவேண்டும். தவறும் பட்சத்தில் காலதாமதமாக சரிக்கட்டப்பட்ட காலத்திற்கு மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் வழிவகை முன்பணங்களுக்கான வட்டி வீதத்திற்குக் குறையாத வீதத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வட்டி அளிக்க வேண்டும்.

**114.** மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அரையாண்டுக்கொருமுறை தலவரி / தல மேல் வரி சரிக்கட்டல் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்படவேண்டும். இதில் மாவட்ட ஆட்சியரகத்திலுள்ள வருவாய்த்துறை மற்றும் ஊராட்சிப்பிரிவுகள் கலந்துகொண்டு தலவரி மற்றும் தலமேல் வரியினை உரிய காலகட்டத்திற்குள் சரிக்கட்டுவதில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விவாதித்து முடிவு செய்யவேண்டும்.

**115.** மாநில அளவில், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் கூட்டம் நடத்தி தலவரி / தலமேல்வரிகள் தவறாமல் சரிக்கட்டப்படுவதை ஆய்வு செய்யவேண்டும்.

**116.** தலவரி / தலமேல்வரித் தொகைகள் குறைத்து சரிக்கட்டப்படுவதைத் தவிர்ப்பதற்காக, சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் பத்தி 65(d)ல் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளின் (Formula) அடிப்படையில் அவை பிரித்தளிக்கப்பட வேண்டும்.

**117.** கர்நாடக மாநிலத்தில் இருப்பது போன்று தலவரி / தலமேல்வரி விதிப்புக்குப் பதிலாக 'ஊராட்சி வரி' என்ற வரியினை விதிப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவினை அரசு அமைத்து, வரி விதிப்பு மற்றும் வரி வசூல் செய்யும் பணியினை கிராம நிர்வாக அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.

**118.** தலவரி / தலமேல் வரிகள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை நிதி ஆதாரமாகக் கருதப்படுவதால் மாநில அரசின் நிதிச் சுமையினையும் கருத்திற்கொண்டு நில வரித்தள்ளுபடி ஆண்டுகளில் (Remission year) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினைத் தவிர்ப்பதற்காக குறைந்தபட்ச அளவாக 50 சதவீத இழப்பீட்டுத் தொகையினை வழங்க வேண்டும்.

**சுரங்கங்களும் கனிமங்களும்**

**119.** தகராறு ஏற்படும் நேர்வுகளில், குத்தகைதாரர்களுக்கு தொகையைத் திருப்பிக்கொடுத்தல் மற்றும் வசூலிக்கப்பட்ட கூடுதல் தொகையை திருப்பிகொடுத்தல் போன்ற இனங்களும் தற்போது நடைமுறையில் உள்ள கணக்குத் தலைப்பில் உள்ளதால் சிறுகனிமங்களிலிருந்து பெறப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு திருப்பிச்செலுத்தும் வருவாயை தனியே கணக்கு வைப்பதற்கென பின்வரும் கணக்குத் தலைப்பிளை ஏற்படுத்த வேண்டும்.

' 900 – கழிக்கவும் - திருப்பிச் செலுத்துபவை ' – AC – சிறுகனிமங்களின் வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்தத்தக்க தொகை.

**120.** செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்த முடியாமல் காலங்கடந்து சென்றுவிடுவதை தவிர்க்கும் பொருட்டு பகிர்ந்தளிக்கும் வருவாய் அதே நிதி ஆண்டில் காலாண்டு அடிப்படையில் சரிக்கட்டப்பட வேண்டும்.

**121.** கிராம ஊராட்சிகள் / சிறப்பு சிற்றூராட்சிகள்/ பேரூராட்சிகள் தகவலுக்காக அப்பகுதிகளில் கல்தோண்டப்படும் பகுதிகளின் வரைபடங்கள் (Sketches) அளிக்கப்படவேண்டும்.

**122.** சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் பத்தி –66(c)இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி **2000–05** ஆண்டுகளில் சிறுகனிமங்களிலிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகை **2006–07** மற்றும் **2007–08** நிதியாண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படவேண்டும்.

**123.** உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேரவேண்டிய தொகைளைச் சரிக்கட்டுவதில் ஏற்படும் தேக்க நிலையைத் தவிர்ப்பதற்காக, ஒரு மாதத்திற்குள் சுரங்கம் / கனிமங்களின் குத்தகைத் தொகையை உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சரிகட்டுவதை தகுதிவாய்ந்த அதிகாரவமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

## அத்தியாயம் – VI

## குடிமைப்பணித் தேவைகள் மற்றும் அவற்றிற்கான நிதிகள்

**124.** இவ்வத்தியாயத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ளதுபோல், பணியாளர்கள் எண்ணிக்கை மீதான வரையறைகளை (Norms) முடிவு செய்தல், தற்போதுள்ள பணியாளர்களின் அமைப்புமுறையை மாற்றியமைத்தல், முக்கியமான பகுதிகளில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பணியாளர்களைப் பணிமாற்றம் செய்தல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைத்தலைவரை தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைத்து படிப்படியாக நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

125. இதே போன்று குடிமைப்பணிகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றமிருக்க வேண்டுமென்பதற்காக இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முறைகள் மற்றும் கருத்துக்களை ஆய்வு செய்ய நடவடிக்கைக்குழு அமைத்து படிப்படியாக அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

126. உள்ளாட்சி அமைப்புகளில் கணினி மயமாக்குதல் மற்றும் மின் - ஆளுமை முயற்சிகளை பன்னிரண்டாவது மத்திய நிதிக்குழு பரிந்துரைத்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதன் மூலம் துரிதப்படுத்த வேண்டும். மேற்கண்ட நடவடிக்கை, இயந்திரமயமாக்கலின் நன்மைகளை மக்கள் உணர வகை செய்யும்.

### அத்தியாயம் – VII

## நிதிப்பொறுப்புகள், கண்காணிக்கத்தக்க நிதிச் சீரமைப்பு மற்றும் மேம்பட்ட நிதி நிர்வாகம்

127. அரசின் மூன்றாவது அடுக்காக விளங்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிதிச் சீர்திருத்தங்களை கொண்டுவரும்பொருட்டு நிதிப்பொறுப்புகள் மற்றும் வரவு - செலவுத் திட்டமேலாண்மைக்கு உரிய சட்டங்களை பிறப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

128. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஊக்க நிதியை வழங்க கணக்கிடுவதற்கு தேவையான காரணிகளை கண்டறிவதற்கு இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதைப்போல நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான திட்டத்தித்தை உருவாக்க வேண்டும்.

129. செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கும் தரம் வாய்ந்த பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் குடிமை பணிகளை நிறைவேற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை பின்பற்றவேண்டும்.

130. இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரை செய்த விகிதத்தை மூன்றாவது மாநில நிதி ஆணையமும் வலியுறுத்துகிறது. இந்த விலை விகிதத்தை 2007–2008 ஆம் ஆண்டு

முதல் நடைமுறைக்கு கொண்டுவரலாம். அதன்பின்பு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மாவட்ட அளவிலான குழு நிர்ணயித்த அளவில் மாற்றியமைக்கலாம்.

**131** தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட **1998–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப் பிரிவு 79-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சட்டங்களில் உரியவாறு சேர்த்து திருத்தப்படவேண்டும். சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட பயனற்ற சொத்துக்களை நீக்கம் செய்வதோடு அச்சொத்துக்களை பராமரிக்க வழிவகைகள் ஏதும் செய்யக்கூடாது.

**132.** நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களின் கையிருப்பை உயர்த்தும் பொருட்டு **1999**ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆணையில் கூறியுள்ளவாறு அமைச்சர்கள் அளவிலான குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அத்தியாயம் – VIII

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் நிவாரணம்

### உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் நிவாரணம்

**133.** குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக **01.04.1998** முதல் **31.03.2002** வரை அரசு / ஆயுள் காப்பீட்டுக்கழகத்திடம் சில நகராட்சிகள் பெற்ற கடன்களுக்கான நிறையிட்ட சராசரி வட்டியாக (Weighted Average) **10.5** சதவீதத்தை நிர்ணயித்து அரசாணை வெளியிட்டுள்து. இந்த குறைந்த வட்டி விகிதத்தை பேரூராட்சிகள் உள்ளிட்ட அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கலாம்.

**134. 01.04.2002** முதல் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் கழிவு நீர்த் திட்டங்களுக்கு இதர கடன் கொடுக்கும் நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள **8%** சதவீதத்தையே நிர்ணயிக்கலாம்.

**135.** ஏற்கனவே அரசு / ஆயுள் காப்பீட்டு கழகத்தின் மூலம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் பெற்ற கடனுக்கான வட்டியை **01.04.2007** முதல் **8** சதவீதம் என நிர்ணயிக்கலாம்.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் இதற்கு ஒத்துக்கொள்ளாத பட்சத்தில் இதர கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து புதிய கடன்களை 8 சதவீத வட்டி வீதத்தில் பெற்று மேற்குறிப்பிட்ட கடன் நிலுவைகளை திருப்பி செலுத்துவதற்கு தேவையான அரசாணைகள் வழங்கப்படலாம்.

136. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கடன் சுமை அதிகமாக உள்ளது. எனவே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கடனுக்கான வட்டி குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளநிவாரணத்திற்கு எவ்விதமான முன் நிபந்தணைகளையும் விதிக்ககூடாது.

137. கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையை ஆராய்ந்த பின்னர் கடன் சுமையை தாங்க இயலும் என உணர்ந்த பின்னர் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

138. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரை கடன் பெறலாம் என எல்லையை நிர்ணயித்து அதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் கடன் சுமையில் சிக்காமல் தடுக்கலாம்.

139. உள்ளாட்சி அமைப்புகள்மீது கடன் சுமைகள் ஏற்றுவதற்கு முன்னர், அவற்றின் தற்போதைய கடன் நிலையையும் மற்றும் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான சக்தி குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு உள்ளாட்சி அமைப்புகள் கடன் தாங்கும் நிலை குறித்து முடிவெடுக்கலாம்..

140. கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்க்காக பெறப்படும் அனைத்து கடன்களும் , உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை நேரடியாக முன்னேற்றம் அடையச்செய்யும் என்று கூறமுடியாது. எனவே , மானியம் மற்றும் கடன்கள் வழங்கும்போது உள்ளாட்சி அமைப்புகளின் வட்டி சுமை குறையும் விதத்தில் அமைவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டும்.

141. வட்டி நிவாரணம் மீதான பரிந்துரையை ஒப்புக்கொண்டு செயல்படுத்தினால் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் / உள்ளாட்சி அமைப்புகள் மூலம் காப்பீட்டு கழகம் அல்லது மற்ற நிறுவனங்களுக்கு வட்டி செலுத்துவதற்காக வழங்கப்படும் திட்டம்சாரா மானியங்களை நிறுத்திவிடலாம்..

## அத்தியாயம் – IX

# உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புடைமையும் தணிக்கையும்

### தணிக்கை

**142.** உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளை முடிப்பதற்கு காலவரம்பு பின்பற்றலாம் என இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்ததை மூன்றாவதுமாநில நிதி ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது.

**143.** உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குநர், தணிக்கை முறையில் மின்னனு முறையை மேற்கொள்வதன் மூலம் தணிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் குறையும். உடனிகழ் தணிக்கையின் பங்கு மற்றும் பணிகள் தொடர்ந்த கண்காணிப்பில் இருக்க வேண்டும்; அப்போது வழக்கமான தணிக்கைப் பிரிவின் வேலைப் பளுவும் குறையும்

**144.** இரண்டாவது மாநில நிதி ஆணையம் உடனிகழ் தணிக்கைக்குப்பதில், முன் தணிக்கை முறையை அறிமுகப்படுத்தலாம் என பரிந்துரை செய்தது. மூன்றாவது மாநில நிதி ஆணையம் அதனை மீண்டும் வலியுறுத்துகிறது. ஏனென்றால் இதன் மூலம் முடிவு பெறாத தணிக்கைத் தடைகளுக்காக நகராட்சி அலுவலர்கள் பணி ஓய்வு பெறும்போது அலைக்கழிக்கப்படுவதை தவிர்க்கலாம்.

**145.** இந்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கைத்துறை சட்டப் பிரிவு 14ன்கீழ் திட்டத் தணிக்கைக்கு தற்போதுள்ள உச்ச வரம்பான ரூ 25 இலட்சத்திலிருந்து ரூ1. கோடிக்கு உயர்த்த தமிழக அரசு எடுத்துக்கொண்டிருக்கும் தீவிர முயற்சியைத் தொடரவேண்டும்.

**146.** துறைத் தலைமை அலுவகங்களில் உள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள், மாநில திட்டக்குழு அலுவலர்கள் மற்றும் இதர துறை / முகவரமைப்பிலிருந்து ஒரு பொறியாளர் ஆகியோரை உள்ளடக்கிய மேலாண்மைத் தணிக்கைக்குழு மற்றும் செயலாக்கத் தணிக்கைக்

குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இது உள்ளாட்சி அமைப்புகள் எடுத்துக்கொண்ட பணிகளை ஆய்வு செய்யும்.

147. உள்ளாட்சி அமைப்புகளில் நிலுவையில் இருக்கும் நெடுநாளைய தணிக்கைத் தடைகளை நிரந்தரமாக முடிப்பதற்காக ஆறுமாதத்திற்கு ஒருமுறை அதாவது ஜூலை மற்றும் ஜனவரியில் கூடுமாறு ஓர் உயர்மட்டக்குழு நியமிக்கப்பட வேண்டும். மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் துறைத் தலைவர்களான ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர், சிறப்பு சிற்றூராட்சி இயக்குநர் ஆகியோர் மேலே குறிப்பிட்டுள்ள உயர் மட்டக்குழுவின் கூட்டத்தை ஏற்பாடு செய்ய பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

148. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை முறையை அறிமுகப்படுத்தலாம். கிராம சபையானது சமூகத்தணிக்கை நடத்துவதற்கு ஏற்ற ஒரு அமைப்பாகும்.

பொறுப்புடைமை

149. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்யும் தவறினை வெளிப்படுத்தும்பொருட்டு அண்டைமாநிலங்களான கேரளம் மற்றும் கர்நாடகாவைப்போல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனியாக தீர்ப்பாயம் போன்ற அமைப்பு அமைக்கப்படவேண்டும் என முதலாம் மற்றும் இரண்டாம் மாநில நிதி ஆணையங்கள் பரிந்துரைத்தன . அதை இந்த ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது.

150. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளாட்சி அமைப்புகள், சுய உதவிக்குழு மற்றும் அரசு சாரா அமைப்புகளை ஈடுபடுத்தவேண்டும். அதே நேரத்தில் மேற்கண்ட அமைப்புகளின் செயல்பாடுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பாதுகாவலாக விளங்கவேண்டும்.

151. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் 2007–12 காலத்திற்கு உரிய திட்டங்கள் குறித்த தொகுப்பை தயார்செய்து கொள்ள வேண்டும். இது குறித்து மாவட்ட திட்டக்குழுவுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். மற்றும் இது பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

152. மக்கள் தகவல் பெறும் சட்டத்தின் மூலம் உள்ளாட்சி மன்றங்களில் நடைபெறுகின்ற பணிகளைப் பற்றிய விவரங்களை பெறமுடியும். ஆதலால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குடிமக்கள் சாசனம் மற்றும் தகவல் உரிமை பெறும் சட்டத்தினை அவசியம் அமுல்படுத்தவேண்டும்.

153. பொதுக்கணக்கு குழுவின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களுக்கென குழு ஒன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் முறைகேடுகளையும், இழப்புகளையும் வெளிக்கொணர முடியும்.

154. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் உள்ளாட்சி குறித்த அடிப்படை விவரத் தகவல்களை இந்திய தலைமைக் கணக்கு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் பரிந்துரைத்த படிவத்தில் கணினியில் சேர்ககவேண்டும். மேலே கூறியுள்ள விவரங்கள் மாநில மற்றும் மத்திய நிதி ஆணையங்களின் ஆய்வுக்கும் அதனைத்தொடர்ந்து அதன் பரிந்துரைகளுக்கும் பயன்படும். சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை விவரங்கள் குறித்த கணினி மயமாக்கலை ஒருவருடத்தில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அதாவது ஏப்ரல், ஜுலை அக்டோபர் மற்றும் ஜனவரி ஆகிய மாதங்களில் கண்காணிக்கவேண்டும்.

**கிராம சபை**

155. கிராம சபைக்கூட்டங்களை வருடத்திற்கு இரண்டு முறை கண்டிப்பாக நடத்த வேண்டும். அதாவது பிப்ரவரி மாதத்தில் வரவு– செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் வகையிலும், ஆகஸ்ட் மாதத்தில் முந்தைய கூட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதை ஆய்வு செய்யவும் கிராம சபையைக் கூட்ட வேண்டும். கிராம சபைக் கூட்டங்கள் பிப்ரவரி / ஆகஸ்ட் மாதங்களில் ஊராட்சிக்கு வசதியான மற்றும் வட்டார / மாவட்ட அளவில் பட்டியலிடப்பட்ட நாட்களில் நடத்தப்படலாம். சிறப்புக் கூட்டங்களை கிராம ஊராட்சியின் ஆய்வாளரின் அறிவுறுத்தலின் பேரில் எத்தனை முறையும் சட்டப்படியான கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் தேவைப்படும் போதெல்லாம் நடத்தலாம். இந்நடவடிக்கையால், ஊராட்சியுடன் தொடர்புடைய துறைகள் மற்றும் பிற அமைப்புகளின் அலுவலர்கள் வசதியாக மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடத்தப்படும் கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்ள இயலும். இரண்டு கிராம சபை கூட்டங்களுக்கும் இடைப்பட்ட காலம் 6

மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கேற்ப கிராம சபைக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

**156.** மாவட்ட ஆட்சியர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை இயக்குநர், கிராம சபை குறித்த அறிவுறுத்தல்களை குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் வழங்குமாறு அறிவுறுத்தலாம். மேலும் எந்த அறிவிப்பும் கிடைக்காத நிலையில் கிராம ஊராட்சிகள் அறிவுப்பு வெளியிடுவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைக்காகக் காத்திருக்கத் தேவையில்லை.

**157.** ஊரக உள்ளாட்சி அமைப்பு நிர்வாகத்தில் ஒளிவு மறைவற்ற தன்மையை ஏற்படுத்தவும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் உறுதியளிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவும் ஊராட்சியின் முந்தைய ஆண்டுக்கான கணக்குகளை தகவல் அறிவிப்பு பிரசுரத்தின் பின் பகுதியில் அச்சிட்டு வழங்குவதால் பொது மக்களுக்கு கிராம ஊராட்சியின் உண்மையான நிதி நிலைமையும் மற்றும் கிராம ஊராட்சியின் வரவு - செலவுகளும் தெளிவாகத் தெரியவரும்.

**158.** கிராம சபையைக் கூட்டுவதற்கான அறிவிப்புகளை குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கு மட்டுமல்லாது ஒவ்வொரு குடியிருப்புக்கும் விநியோகம் செய்ய வேண்டும். இதனை பல வழிகளில் செய்யலாம். உதாரணமாக, நாளேடுகள் விநியோகிப்பவர்கள், பால் விநியோகிப்பவர்கள் மற்றும் இவர்களைத் தவிர கிராம ஊராட்சிகளில் உள்ள தினக் கூலி பணியாளர்களின் மூலமும் செய்யலாம்.

**159.** கிராம சபைக் கூட்டங்களில் குறைவெண் வரம்பு (Quorum) கிராமத்தில் உள்ள மொத்த வாக்காளர்களில் 1:20 என்ற விகிதாசாரத்திலும், அதிகபட்சமாக 300 என்றும் நிர்ணயிக்கலாம். இது குறித்து சம்மந்தப்பட்ட விதிகளில் திருத்தம் செய்யலாம்.

**160.** கிராம சபைக் கூட்டங்களில் அதிக அளவில் உறுப்பினர்கள் பங்கேற்கவும் அதே சமயம் குறைவெண் வரம்பினை உறுதிசெய்ய கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது:-

அ) குடியிருப்போர் நலச் சங்கங்களை ஈடுபடுத்தி அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு கிராம வளர்ச்சித்திட்டங்களை மையமாக கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் மற்றும் பங்கேற்க்கவும் செய்யலாம்.

ஆ) கிராம சபை மூலமாக அந்தந்த ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் தவறாமல் பங்கேற்ற உறுப்பினர்களை பாராட்டலாம்.

இ) கிராம சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களில் சுய உதவிக் குழுக்களால் தயார் செய்யப்பட்ட கைவினைப்பொருட்களைக் கொண்டு திறந்த வெளி விற்பனை கூடங்கள் அமைக்கலாம்.

ஈ) கிராம சபைக் கூட்டங்களை சிற்றூர் / குடியிருப்பிடம் ஆகியவற்றில் சுழற்சி முறையில் நடத்தலாம்.

உ) உயர்நிலையில் உள்ள சில அலுவலர்களை கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளச் செய்யலாம்.

ஊ) கடந்த கிராம சபை கூட்டங்களில் எழுப்பப்பட்ட கோரிக்கைகள் மீதான பதிலைப் பெறுவதில் மக்களுக்கு உள்ள ஆர்வம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**161.** கிராம சபைக் கூட்டத்திற்கான பொருள் நிரல் விவரம் பொதுவாக கிராம ஊராட்சி மன்றக் கூட்டத்தில் தயார் செய்யப்பட வேண்டும். அரசால் கொண்டுவரப்பட்ட புதிய திட்டங்கள் தொடர்பான விவரங்கள் மட்டுமே பொருள் நிரலில் சேர்க்க வேண்டி மாவட்ட நிர்வாகத்தால் அனுப்பப்பட வேண்டும்.

**162.** ஊழலைத் தவிர்க்கவும் உறவினர்களுக்கு தனிச்சலுகை வழங்குவதை தவிர்க்கவும் கிராம சபை மூலமாக சரியான சமூகத் தணிக்கை முறையை உருவாக்க வேண்டும். இது நல்ல சமூக நீதியை நிர்வகிக்க வழிவகுக்கும். கிராம ஊராட்சிகளின் ஆவணங்கள் மற்றும்

பணிகளுக்கான ஒப்பந்தங்கள் அளித்த விவரம் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியல் போன்றவற்றை சமூகத் தணிக்கைக்கு போதிய பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புடன் கிராம சபை கூட்டங்களின்போது வைக்க வேண்டும். கணக்குகள் மற்றும் ஒப்புதல் பெறப்பட்ட வரவு–செலவுத் திட்ட அறிக்கை, வரி/வரியல்லாத இனங்களின் வசூல் விவரம் மாதந்தோறும் கிராம ஊராட்சியால் செலுத்தப்பட்ட மின் கட்டணம் ஆகியவற்றை அறிவிப்புப் பலகையில் கண்டிப்பாக வைக்க வேண்டும்; இதனை வட்டார அளவிலான அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும்.

**163.** கிராம சபையால் பல்வேறு பொருள்கள் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை கூட்டம் நடைபெறும் பொழுதே உடனடியாக நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். ஆணையத்தால், பார்வையிடப்பட்ட பெரும்பாலான கிராமசபைக் கூட்டங்களில் இது செயல்படுத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது.

**164.** முந்தைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நடப்பு கிராம சபை கூட்டத்தில் முறையாக தெரிவிப்பதுடன் அதனை விவாதிக்கவும் வேண்டும். ஆனால், பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் இவ்வாறு செய்யப்படுவதில்லை. கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சம்மந்தப்பட்ட துறைகள் மதித்து உடனடியாக தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் வாக்காளர்களுக்கு தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உண்டாகும்.

**165.** கிராம வளர்ச்சித் திட்டம் உள்ளடக்கிய பல்வேறு திட்டங்களின் தேவை மற்றும் முக்கியத்துவம் கிராம சபை உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட வேண்டும்.

**166.** ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம சபையின் ஒப்புதலுடன் கிராம வளர்ச்சித் திட்டம் / திட்டங்களின் தொகுப்பு தயாரிக்கப்பட்டு, இதில் உள்ளடங்கிய திட்டங்களையே நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேர்வு செய்ய வேண்டும். இதனால் உள்ளூர்த் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க இயலும். அது மட்டும் அல்லாமல் திட்டங்களின் ஒப்பளிப்பு, செயல்படுத்துதல் மற்றும் முடித்தல் ஆகியவை கிராம சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் / சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிராம சபை ஒப்புதல் பெற்ற பணிகளை

மட்டுமே தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் வகையில் மத்திய / மாநில அரசுகளின் வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

**167.** கிராம சபை மற்றும் சுய உதவிக் குழுக்கள் / அரசு சாரா அமைப்புகளுடனான தொடர்பை வலுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

அ) சுய உதவிக்குழு உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் பட்டியலிடுதல் ஆகியவற்றிற்கு கிராம சபை ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஆ) திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள எல்லா விசயங்களிலும் கிராம சபையைக் கலந்தாலோசிக்கும் வகையில் பல்வேறு திட்டச் செயல்பாடுகளில் அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பினை ஊராட்சி / கிராம சபையுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.

இ) மாவட்ட / வட்டார அளவிலான அலுவலர்கள் ஒவ்வொரு கிராம ஊராட்சியின் வளர்ச்சியிலும் அதிக அளவில் அரசு சாரா அமைப்புகளை ஈடுபடுத்த ஊக்குவிக்க வேண்டும்.

ஈ) திடக்கழிவு மேலாண்மைச் செயல்பாடுகள், ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதார வளாகம், அங்கன்வாடி மையம், பொதுசுகாதாரமையம் ஆகியவற்றின் பராமரிப்பு போன்றவற்றில் சுய உதவிக்குழுக்கள் முழுமையாகப் பங்கேற்க அரசு சாரா அமைப்புகள் போதிக்க வேண்டும்.

**168.** மாவட்ட / வட்டார அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒட்டுமொத்த விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை நடத்தி அதில் கிராம சபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் அதன் பொறுப்புகள் குறித்தும் மேலும் கிராம சபைகளில் உறுப்பினர்களின் பங்கு ஆகியவற்றையும் வாக்காளர்களுக்கு உணர்த்த வேண்டும்.

**169** கிராம அளவில் திட்டங்களைத் தீட்டி, கிராம சபையின் ஒப்புதலைப் பெற்று மாவட்டத் திட்டத்துடன் அதனை ஒருங்கிணைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**170.** கிராம சபையால் கண்டறியப்பட்ட முன்னுரிமைத் திட்டங்கள் தொடர்புடைய துறைகளின் செயல்பாடுகளில் சேர்க்கப்பட்டு மாவட்டத் திட்டக்குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**171.** மூன்றாவது மாநில நிதி ஆணையத்தால் கிராம ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்ய பரிந்துரைக்கப்படும் பணிகள் குறித்து கிராம சபைக் கூட்டங்களில் விவாதித்து முடிவு செய்யலாம்.

**172.** மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட சட்டம் / விதிகளுக்கு திருத்தம் தேவைப்படுமானால் அவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நகர்ப்புறப்பகுதி சபை**

**173.** நகரங்களில் வசிக்கும் மக்கள் திட்டமிடுவதிலும், திட்டப்பணிகளை நடைமுறை படுத்துவதிலும் முழுமையாக ஈடுபடும் வண்ணம் இந்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புத் திட்ட அமைச்சகம் கருதுவது போன்று, சமுதாயப் பங்கேற்புச் சட்டங்களை இயற்றலாம்.

**174.** நகர்ப்புறப்பகுதி சபையில் முதற்கட்டமாக, குடியிருப்போர் நலச்சங்கப் பிரதிநிதிகள், அமைப்புகள், அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் சுயஉதவிக் குழுக்கள், மாதர் சங்கம், இளைஞர் படை மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரைக் கொண்டு வார்டு அளவில் உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம்.

**175.** கிராம சபை போலவே நகர்ப்புறப்பகுதி சபைக் கூட்டத்தையும் வருடத்திற்கு இரண்டு முறை அதாவது பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே வரவு–செலவுத் திட்டம் பற்றி ஆய்வு செய்தல் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பற்றி விவாதிக்கலாம்

**176.** கூட்டங்களை ஒவ்வொரு வார்டிலும் சுழற்சி முறையில் நடத்தலாம்; கூட்டத்திற்கான செலவுகளை அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளே ஏற்கச் செய்யலாம்.

177. முந்தைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மீது எடுத்த நடவடிக்கை பற்றிய விபரங்களை அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கலாம்.

178. நகர்ப்புறப் பகுதி சபை தான் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஐந்து ஆண்டிற்கான திட்டத் தொகுப்பினை தயார் செய்ய வேண்டும்.

## அத்தியாயம் X

## உள்ளாட்சி அமைப்புகளின் மறுவகைப்பாடு

179. ஒரு கிராம ஊராட்சியின் மக்கட் தொகை 3000 ஆக இருக்கின்ற வகையில் கிராம ஊராட்சிகளை மறுவகைப்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரைக்கொண்ட கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்கள் மறுவகைப்பாட்டுக்குழுவை அரசு அமைக்க வேண்டும். ஆனால் மலைப்பகுதிகளுக்கும் பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கும் விலக்களிக்கப்படலாம். அதேபோன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 35 கிராம ஊராட்சிகளை கொண்டிருப்பதைபோல் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதனால் ஊராட்சி ஒன்றியங்கள் ஒரே சீராக இருப்பது மட்டும் அல்லாமல் தேவையற்ற நிர்வாக செலவுகளை குறைக்கவும் உதவும். இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்த சிறிது காலம் பிடிக்கும். 2006ஆம் ஆண்டு நடக்க இருக்கும் உள்ளாட்சி தேர்தல்கள் தற்பொழுதுள்ள அமைப்புமுறையில் நடக்கலாம். தேர்தல் முடிந்தவுடன் மூன்றாண்டுகளுக்குள் ஊராட்சிகளை மறுவகைப்பாடு செய்யவும், திருத்தியமைக்கவும், சட்டச்சிக்கலை எதிர்கொண்டு ஒருமித்த கருத்தை உருவாக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறு ஏற்பட்டால் 2011 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உள்ளாட்சி தேர்தலை நடத்தவும் வசதியாக இருக்கும். 2011 ஆம் ஆண்டு ஒருமுக்கியமான ஆண்டாக கருதப்படவேண்டும். ஏனென்றால் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது ஊரகப்பகுதி மற்றும் நகர்ப்பகுதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு கணக்கிடப்பட்டு வெளியிடப்படுவதால் திருத்தியமைக்கப்படும் ஊராட்சிகளில் தேர்தல் நடத்த எவ்வித சிரமும் இருக்காது.

180. சென்னைப் பெருநகரப்பகுதியில் உள்ள மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நகராக கருதப்படும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சியாகவோ அல்லது நகராட்சியாகவோ

மறுவகைப்பாடு செய்யலாம். இதனால் நகர்ப்புறங்களில் செய்ல் படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம் மற்றும் வரி ஆதாரத்தை பெருக்கவும் முடியும்.

181. ஜவஉறர்லால் நேரு தேசிய நகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளில் வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளை ஒட்டி அமைந்துள்ள கிராம ஊராட்சிகளையும், நலிவடைந்த பேரூராட்சிகளையும் இம்மாநகராட்சிகளுடன் சேர்த்துவிடுவதால் இங்குள்ள மக்கள் இத்திட்டத்தினுடைய பயன்களை முழுவதுமாக அடைய முடியும்.

பேரூராட்சிகள்

182. அரசாணை (நிலை) எண் 62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.7.2006ன்படி 561 சிறப்பு சிற்றூராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்ற அரசு முடிவு எடுத்து ஆணை வழங்கியதை இவ்வாணையம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், பேரூராட்சிகள் இடைப்பட்ட நகர்ப்புறப் பகுதிகளாக தொடர்ந்து நீடிப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

183. மக்கட்தொகை கணக்கெடுப்பு நகரங்கள் 111ம் நகர்ப்புறப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட வேண்டும். இது, மக்கட் தொகை கணக்கெடுப்புத் துறை மற்றும் மாநிலச் சட்டம் ஆகியவை அளிக்கும் வெவ்வெறு வகைப்பாடுகளைத் தவிர்க்க உதவும்.

184. 263 சிறப்பு சிற்றூராட்சிகள் கிராம இயல்புகளைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றின் நிதி நிலை தன்மையை ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி ஒரு குழுவின் மூலம் 2008–க்குள் கண்டறிந்து அவைகளை ஊராட்சிகளாக மாற்றுவதற்கு முடிவெடுக்க வேண்டும். அப்போதுதான் 2011–ல் உள்ளாட்சித் தேர்தல் நடத்தும்பொழுது எவ்வித சட்ட சிக்கலும் இல்லாமல் நடத்தலாம். 2011ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்புக்கு முன்னர் மறுவகைப்படுத்துவதால் உண்மையான கிராம மற்றும் நகர மக்கள் தொகையைக் கணக்கிட முடியும்.

185. பேரூராட்சிகளில் தற்போது உள்ள 4 நிலைகளை மாற்றி 3 நிலைகளாகக் குறைக்கலாம். அனைத்து இரண்டாம் நிலை பேரூராட்சிகளும் முதல் நிலை பேரூராட்சிகளாக தரம் உயர்த்தப்படலாம்.

186. அரசு, கிராம ஊராட்சிகளை குறிப்பாக நகர மையத்தைச் சுற்றியுள்ளவற்றை பேரூராட்சிகளாக மறுவகைப்படுத்த அவ்வப் போது ஆய்வு செய்ய வேண்டும். வார்டு முறை தேர்தல்கள் மறுபடுவதால் மறுவகைப்பாடு செய்யும் பட்சத்தில் பதவிக் காலத்தின் கடைசி வருடத்தில் தொடங்கி தேர்தல் நடைபெறும் தேதிக்கு குறைந்தபட்சம் ஆறுமாதம் முன்னரே அதனை முடித்திடவேண்டும்.

நகராட்சிகள்

**187.** பல்வேறு முரண்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, நகராட்சிகளை வருவாயின் அடிப்படையில் பின்வருமாறு மறு வகைப்பாடு / மறு தொகுப்பு செய்யலாம்:

| | | |
|---|---|---|
| நிலை II | – | ரூ. 1 கோடிக்கு மேல் ரூ 4 கோடிக்குள் |
| நிலை I | – | ரூ. 4 கோடிக்கு மேல் ரூ. 6 கோடிக்குள் |
| தேர்வு நிலை | – | ரூ 6 கோடிக்கு மேல் |

**188.** நகராட்சியை தோற்றுவிப்பதற்கும் நிலை உயர்த்தவும் மேற்குறிப்பிட்ட வருவாய் வரையறையை அவற்றை மறு வகைப்பாடு செய்யவும் எந்த ஒரு இடைப்பட்ட நகர்ப்பகுதி / பேரூராட்சி அல்லது என்ன பெயரால் அழைக்கப்பட்டாலும் அவற்றை நகராட்சியாக தரம் உயர்த்தவும் பின்பற்ற வேண்டும். இதற்கெனத் தேவையான சட்டம் / விதிமுறைகள் ஏற்கெனவே உள்ள மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும் புதிய சட்டம் இயற்றப்பட்டால் அதிலும் சேர்க்கப்படலாம்

**189.** இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்தபடி, ஏற்கெனவே நகராட்சியில் ஒரு கோடிக்கும் குறைவாக வருமானமும் வரி வருவாயை பெருக்குவதற்கு கூடுதல் வரி ஆற்றலும் இல்லாத நகராட்சிகளை பேரூராட்சிகளாக மறு வகைப்பாடு செய்யலாம்.

**190.** நகராட்சி நிர்வாக ஆணையரை தலைவராகவும் அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களை உறுப்பினர்களாகவும் நகராட்சி நிர்வாக இணை ஆணையரை உறுப்பினர் – செயலராகவும் கொண்டு ஒரு குழு அமைக்கலாம். இக்குழு, ஒவ்வொரு நிலையிலும் உள்ள நகராட்சிகளுக்கு உண்டான பணியாளர்கள் வரையறையினை முடிவு செய்து கூடுதலாக உள்ள நகராட்சி நிர்வாக பணியாளர்களை, ஐம்பது பேரூராட்சிகளை நகராட்சிகளாக மறு வகைப்பாடு செய்வதால் அத்தகைய நகராட்சிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை மாற்றுவது குறித்து கருத்து தெரிவிக்க வேண்டும்.

**191.** மாநகராட்சிகள் மறுவகைப்பாடு குறித்து முடிவு எடுக்க அரசு, நகராட்சி நிர்வாக ஆணையர், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் (மதுரை / கோயம்புத்தூர்) மற்றும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழுவை ஏற்படுத்தி அதன் அறிக்கை பெற்ற பின்பு முடிவு மேற்கொள்ளலாம் என மூன்றாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கின்றது.

**192.** மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலத்தில் திருப்பூர் நகராட்சியைத் தவிர மற்ற நகராட்சிகளில் மக்கட் தொகை போதிய அளவு இல்லாததால் எந்த நகராட்சியையும் மாநகராட்சியாக நிலை உயர்த்தத் தேவையில்லை.

**193.** மறு வகைப்பாடு குறித்து அரசு எடுக்கும் சில முடிவுகளால் அதன் பின் விளைவுகளை சந்திக்க நேரிடும். ஆகவே , அடுத்த மூன்றாண்டுகளில் ஒரு ஒருமித்தக் கருத்தை உருவாக்க முயற்சி செய்வதுடன், சட்டச் சிக்கல்களை களைவதற்கும் அரசு முற்பட வேண்டும். இது அடுத்த உள்ளாட்சி மன்ற தேர்தலின் போது வரும் தலைமுறையின் சவால்களை சமாளிக்க வல்ல மற்றும் நிதி நிலையில் வலுபெற உதவும். உள்ளாட்சி அமைப்புகளை தோற்றுவிக்க வழிவகுக்கும்.

## அத்தியாயம் XI

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகளும் அதிகாரங்களும் வழங்குதல்

### பொது விநியோகமுறை

**194.** அரசியலமைப்பு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு பொதுவிநியோகமுறையை சீராக நடத்தவும் கண்காணிக்கவும் தற்பொழுது உணவு வழங்கும்துறை மற்றும் கூட்டுறவுத் துறையால்

நடத்தப்படும் பொது விநியோகக் கடைகளை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கலாம்.

**195.** மாநில அளவில் அரிசி மற்றும் உணவுப்பொருட்களை கொள்முதல் செய்யவும் பிரித்து வழங்கவும் அதிகாரம் தற்போது உள்ளது போல் தொடர்ந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் உணவு வழங்கல் துறையிடம் இருக்கலாம்.

**196.** பொது விநியோக முறைக் கடைகள் மற்றும் அங்கு பணியாற்றும் விற்பனையாளர்கள் கிராம ஊராட்சியின் கட்டுப்பாட்டில் பணியாற்றுமாறு மாற்றம் செய்யப்பட வேண்டும். இந்த பணியாளர்களுக்கு மாதந்தோறும் உரிய காலத்தில் சம்பளம் பட்டுவாடா செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத்துறையிலிருந்து சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி கணக்கிற்கு வரவு வைக்கின்ற வகையில் தொகையை முன்னதாகவே மாற்றம் செய்ய வேண்டும்.

**197.** கிராம ஊராட்சி பொது விநியோகமுறைக்கு உணவுப்பொருள்தேவைகளைக் கணக்கிட்டு வழங்குமாறு கோருவதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் சரிபார்த்து உணவுப் பொருள் வழங்கும் நிறுவனத்திடம் அப்பொருட்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டும்.

**198.** பொது விநியோக முறை கடைகள் செயல்படுவதை மாவட்ட அளவில் மாதந்தோறம் கண்காணிக்க வேண்டும்.

**199.** ஊரக உள்ளாட்சி பகுதிகளில் பொது விநியோகக் கடைகள் ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு செயல்படுவதை ஆய்வு செய்தபின்னர் அப்பொறுப்பை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு மாற்றம் செய்வதற்கு பரிசீலனை செய்யலாம்.

பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்குதல்

**200.** பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்கும் பொறுப்பை கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கலாம். சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அளிக்கும் தகவலின் அடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவர் பிறப்பு இறப்புச் சான்றிதழை வழங்க வேண்டும்.

**201.** பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள், வட்டாட்சியர் அலுவலகத்தில் வசூலிக்கப்படும் தொகையின் அளவாகவே இருக்க வேண்டும்.

**202.** மக்கட் தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பொருட்டு ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையை கிராம ஊராட்சித் தலைவர் மாதந்தோறும் சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும்.

**203.** பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் வழங்கும் பொறுப்பு கிராம ஊராட்சிக்கு மாற்றப்படும்போது, மக்கட் தொகை சம்மந்தப்பட்ட புள்ளி விவரங்கள் சரியான முறையில் சேகரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக ஒருமுறைப்படுத்தும் அமைப்பினை ஏற்படுத்தி அவ்வப்போது சரிபார்கக வேண்டும்.

**204.** தொடக்கக் கல்வி ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படலாம். ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிர்வகிப்பதற்கான நடைமுறைகள் இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் இருக்க வேண்டும்.

**நூலகங்கள்**

**205.** தற்பொழுது நூலக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்ற மாவட்ட நூலகங்கள் மற்றும் ஏனைய வட்டார அளவிலான கிளை நூலகங்கள் நூலகங்களின் பணியாளர்களுடன் சேர்த்து மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்படவேண்டும்.

**206.** ஊரக உள்ளாட்சி அமைப்புகள் / நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளினால் வசூலிக்கப்படும் நூலக வரி, சம்பந்தப்பட்ட மாவட்ட ஊராட்சிகளின் கணக்கிற்கு மாற்றப்படவேண்டும்.

**207.** சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், கன்னிமாரா பொது நூலகம் மற்றும் மாவட்ட மைய நூலகத்தைத் தவிர பிற நூலகங்கள், நூலகங்களின் பணியாளர்களுடன் சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்படவேண்டும். நூலக வரியாக வசூலிக்கப்படும் தொகையானது

நூலகங்களை நடத்துவதற்கும், பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஏனைய பராமரிப்பிற்கும் பயன்படுத்தப்படவேண்டும்.

208. தற்போது பணியிலுள்ள நூலகப் பணியாளர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் பாதுகாக்கப்படவேண்டும். நூலகத்துறையின் இயக்குநர், நூலகப் பணியாளர்கள் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுப்பதற்கான மேல்முறையீட்டு அலுவலராகச் செயல்பட வேண்டும்.

209. பொது நூலகத்துறை இயக்குநர், நூலகங்களை நடத்துவதிலும் புத்தகங்களின் தரத்தினை மேம்படுத்துவதிலும் ஏனைய பிற நடவடிக்கைகளிலும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்க வேண்டும். அறக்கட்டளை சம்பந்தப்பட்ட பணிகள் தொடர்ந்து பொது நூலகத்துறை இயக்குநரிடமே இருக்கலாம்.

210. அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் பணி நியமனக் கொள்கை பற்றிய வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் நூலகங்களின் பணி நியமனங்களை மாவட்ட ஊராட்சிகள் / சென்னை மாநகராட்சியே தீர்மானிக்க வேண்டும்.

211. எங்கெல்லாம் மாநகராட்சிகள் / நகராட்சிகள் அவற்றின் சொந்த நூலகங்களை நடத்துகின்றனவோ அங்கெல்லாம் அந்த நூலகங்கள் தொடர்ந்து மாநகராட்சிகள் / நகராட்சிகளாலேயே நடத்தப்படவேண்டும்.

212. மாவட்ட நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவது ஒரு அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களால் கண்காணிக்கப்படவேண்டும். நூலக வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 30 சதவிகிதத் தொகை புத்தகங்கள் வாங்குதற்கு தனியாக ஒதுக்கப்படவேண்டும்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களை அளித்தல்

213. அரசாணை நிலை எண். 119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை., நாள் 18.7.1998 மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட நிர்வாக ஒப்புதல் பொறுப்பு திரும்ப பெறப்பட்டது. அதனை மீண்டும் மண்டல நகராட்சி நிர்வாக

இயக்குநரிடமே வழங்கலாம். ஆனால், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், நகர் மன்றத்திடமிருந்து கருத்துரு பெற்ற ஒரு மாத காலத்திற்குள் நிர்வாக அனுமதி அளிக்கவேண்டும். இந்தக் கால அளவிற்குள் நிர்வாக ஒப்புதல் தரமறுக்கும் அலுவலர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும்.

**214.** மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு, நிர்வாக அனுமதி வழங்கும் தொகையின் அளவை ரூ 50 லட்சமாக உயர்த்தலாம். மண்டல செயற்பொறியாளருக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அளவை பொதுப்பணித்துறையில் பணியாற்றும் மேற்பார்வை பொறியாளருக்கு வழங்கப்பட்ட அளவான ரூ 50 லட்சம் அல்லது அதற்கு அதிகமாக என்ற அளவில் வழங்கலாம். மேற்குறிப்பிட்ட உயர்த்தப்பட்ட உச்சவரம்பு ஒவ்வொரு பணிக்கும் பொருந்தும். ஆனால், அது சம்மந்தப்பட்ட நகராட்சியின் வரவு –செலவு.த் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும.

**215.** அனுமதி வழங்கும் தொகையின் அளவு உயர்த்தப்பட்ட பிறகு, நடைபெற்ற பணிகளின் செயல்பாட்டை நகராட்சிகளின் ஆய்வாளரான நகராட்சி நிர்வாக ஆணையர் மாதந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும்.

**216.** நகராட்சி மன்றங்களுக்கு பணிகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் குறைந்த அளவிலேயே உள்ளது. இத்தொகை ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். எனவே, அனுமதி வழங்கும் தொகையை பின்வருமாறு மாற்றியமைக்கலாம் :

| நகராட்சியின் தரம் | நகராட்சி மன்றம் | மண்டல இயக்குநர் | நகராட்சி நிர்வாக ஆணையர் | அரசு |
|---|---|---|---|---|
| தேர்வு நிலை | ரூ 35 லட்சம் வரை | ரூ 50 லட்சம் வரை | ரூ 500 லட்சம் வரை | ரூ 500 லட்சத்திற்கு மேல் |
| முதல் நிலை | ரூ 30 லட்சம் வரை | ரூ 50 லட்சம் வரை | ரூ 500 லட்சம் வரை | ரூ 500 லட்சத்திற்கு மேல் |
| இரண்டாம் நிலை | ரூ 25 லட்சம் வரை | ரூ 50 லட்சம் வரை | ரூ 500 லட்சம் வரை | ரூ 500 லட்சத்திற்கு மேல் |

நகராட்சிகளில் பணிகளுக்கான ஒப்பளிப்பு வழங்குவதற்கான உச்சவரம்பை உயர்த்தியதை கருத்திற் கொண்டு அரசு மாநகராட்சி மன்றங்களுக்கு அனுமதி வழங்கும் தொகையைத் திருத்தியமைக்கலாம்.

**217.** நகராட்சி ஆணையர் / நகராட்சிப் பொறியாளரிடமிருந்து விளக்கமான அறிக்கை பெற்ற பின்பு, அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை இடிப்பதற்கான அதிகாரங்களை நகராட்சி மன்றங்களுக்கு வழங்கும் வகையில் நகராட்சிகள் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டுவரலாம்.

**218.** அரசு ஆணைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளைத்தெரிந்துகொள்வதன் பொருட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தும் வகையிலும் ரகசியமான விவரங்கள் தவிர மற்ற கடிதப் போக்குவரத்துகள் அனைத்தும் நகராட்சி மனறத் தலைவர்களுக்கு அனுப்பவேண்டும்.

## அத்தியாயம்–XII

## உள்ளாட்சி அமைப்புகளுடன் தொடர்புடைய அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் பங்குப்பணிகள்

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

**219** சென்னை மாநகராட்சியின் தற்போதைய நிதிப்பகிர்வுப் பங்கில் இருந்து 10 சதவீதத்தை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு வழங்க வேண்டும்.

**220.** சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியச் சட்டப் பிரிவு 34–ல் குறிப்பிட்டுள்ள விகிதங்களில் குடிநீர் வரி வீதத்தை திருத்தி அமைக்கலாம்.

**221.** குடிநீர் கட்டணம் / கழிவுநீர் கட்டணம் ஆகியவற்றை 2007–08 – ஆம் ஆண்டில் திருத்தம் செய்வதோடு 3 ஆண்டுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கலாம். அனைத்து குடிநீர்

இணைப்புகளிலும் அளவுமானி பொருத்துவதால் கூடுதல் வருமானம் ஈட்ட முடியும். இதனை படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம்.

**222.** கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்தை செயல்படுத்திவரும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு அத்திட்டத்திற்கு ஆகும் அதிகப்படியான செலவைக் கருத்திற்கொண்டு அரசு தகுந்த வகையில் ஈட்டுத்தொகை வழங்க பரிசீலனை செய்யலாம்.

.

**223.** நிதிப்பகிர்வு மான்யம் வளர்ச்சிப் பணிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செலவிடப்பட வேண்டும்.

**நகர ஊரமைப்புத் திட்டமிடல் இயக்குநர்**

**224.** சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் ஏற்கெனவே எடுத்துக்கூறியுள்ளபடி நகர ஊரமைப்புத் திட்டமிடல் சட்டம் மற்றும் நகராட்சிச் சட்டங்களில் திருத்தம் செய்வதன்மூலம் திட்டமிடல் அதிகாரவமைப்பையும் கட்டிட உரிமம் வழங்கும் அமைப்பினையும் ஒரே ஆளுமையின் கீழ் கொண்டு வரவேண்டும். இது, மனைப்பிரிவு ஒப்புதலில் உள்ள பின்னடைவுகளைச் சரிசெய்யவும் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கவும் உதவும்.

**225.** 75 சதவிகித மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் திறந்தவெளி முறைப்படுத்தும் கட்டணம் ஆகியவை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி நேரிடையாக வழங்கப்படவேண்டும். ஆனால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்வகையில் மாற்றப்பட்ட தொகையிலிருந்து வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவுகளைச் செய்வதற்கு அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

.

**226.** நகர ஊரமைப்புத் திட்டமிடல் இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியவைகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். இது மேற்கண்ட திட்டமிடல் அமைப்புகளின்மீது இருதுறைகளின் கட்டுப்பாட்டை தவிர்க்கவும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகப் பிரச்சனைகளைக் களையவும் உதவும்.

227. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த வருவாயில் 1 சதவீதத்தை திட்டமிடல் துறையின் நிதிக்காக வசூலிப்பது காலத்திற்கொவ்வாததாகத் தோன்றுவதால் உடனடியாக நீக்கப்படவேண்டும்.

**சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்**

228. வரைபட அனுமதி மற்றும் கட்டிட உரிமம் வழங்குவதை ஒரே அமைப்பின் கீழ்க் கொண்டு வந்தால் விதி மாறுபாடுகளையும் விதி மீறல்களையும் அந்த அமைப்பு சமாளிக்கமுடியும். அதற்கு, நகர ஊரமைப்புத் திட்டமிடல் சட்டம் மற்றும் நகராட்சிச் சட்டங்களில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

229. 74வது இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கேற்ப திட்டமிடல் பணிகள் மற்றும் நில உபயோகம் பற்றிய பணிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படலாம். நகராட்சிகளுக்கு தேவைப்படும் தொழில் நுட்ப மற்றும் பணித்திறன் பயிற்சிக்காக குழுமத்தின் தொழில் நுட்பப் பணியாளர்களை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பலாம்.

230. சென்னைப் பெருநகரத் திட்டமிடல் குழு சம்பந்தப்பட்ட பத்தியில் பரிந்துரைத்தபடி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் , சென்னைப் பெருநகரத் திட்டமிடல் குழுவின் செயலகமாகச் செயல்படலாம்.

231. 75 சதவிகிதம் மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் திறந்வெளி முறைப்படுத்தும் கட்டணம் நகர்ப்புற உள்ளாட்சிகளின் வளர்ச்சிப்பணிக்காக தொடர்புடைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படலாம். மாற்றப்பட்ட பணத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட பணிகளை துறைத் தலைவர் / அரசு ஒப்புதல் பெற்று மேற்கொள்ளலாம்.

232. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அட்டவணை XII - ன்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில் சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடைய வருவாய் வரவுகளில் 0.25 சதவிகிதத்தை திட்டக் குழுமத்தின் நிதிக்கு மாற்றுவது உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

**233.** தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ள முறைப்படுத்தும் வருவாயினை சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின் மீதான அறிவிப்புக்குப் பிறகு சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்புகளோடு பகிர்ந்து கொள்ளலாம்.

**சென்னைப் பெருநகரத் திட்டமிடல்குழுவை அமைத்தல்**

234. சென்னைப் பெருநகரத் திட்டமிடல் குழுவை அமைக்க மாநகராட்சிச் சட்டம், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிச் சட்டங்களில் திருத்தம் கொண்டுவருவதற்குப் பதிலாக தனிச் சட்டம் இயற்றலாம்.

**235.** சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் நகர்ப்பகுதிகளாகக் கொண்டு வந்து அல்லது அருகிலுள்ள நகராட்சிகளுடன் இணைத்து மக்கட் தொகைக் கணக்கெடுப்புத் துறை வகைப்படுத்தியுள்ளபடி, சென்னைப்பகுதியை முழுமையான நகர்ப்பகுதியாக வகைப்படுத்தலாம்.

**236.** சென்னைப் பெருநகரத் திட்டமிடல் குழுவிற்கென சம்பந்தப்பட்ட சட்டத்தில் வரையறுக்கப்படும் பணிகளுடன் இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த பணிகளையும் இந்த ஆணையம் மீண்டும் வலியுறுத்துகிறது..

**237.** சென்னைப் பெருநகரத் திட்டமிடல் குழுவை ஏற்படுத்தியபின் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம் சென்னைப்பெருநகரத் திட்டமிடல் குழுவின் தலைமைச் செயலகமாகச் செயல்படலாம்.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்**

**238.** 1977 ஆம் ஆண்டு தண்ணீர் தீர்வைச் சட்டத்தை திருத்துவதன் மூலம் தண்ணீர் தீர்வை செலுத்துவதிலிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விலக்களிக்கப்பட வேண்டும்.

**239.** சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதை சிறப்பாகக் கண்காணிக்கவேண்டி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக்கொண்டு மாவட்ட

அளவிலான குழுக்களை அமைக்கவும், சென்னையைப் பொருத்தமட்டில் சென்னை மேயரை தலைவராகக்கொண்டு குழு அமைக்கவும் இரண்டாவது மாநில நிதி ஆணையம் அளித்த பரிந்துரை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

**240.** கீழ்க்கண்ட பணிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஒத்துழைப்போடு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அவசியம் நிறைவேற்றப்படவேண்டும்:

(அ) துப்புரவுக் கழிவுகளை நிரப்புவதற்குப் பயன்படும் இடங்களை மனைகளை முறைப்படுத்துதல்

(ஆ) திடக்கழிவுகளை அறிவியல் முறையில் அகற்றுதல்

**தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்**

**241.** உள்ளாட்சி அமைப்புச் சட்டங்களுக்கு மேலாகச் செயல்படும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டப்பிரிவுகள் 35, 37, 38, 39, 40, 44, 45, 64 மற்றும் 152 மற்றும் ஏனைய பிற பிரிவுகள் ஏதேனும் இருப்பின் அவைகள் 74வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு ஒத்த வகையில் திருத்தப்பட வேண்டும்.

**242.** வீட்டு வசதி வாரியத்தால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சொத்துகளின் மீது சொத்து வரி விதிப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

**243.** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒரு குடியிருப்புத் திட்டத்தை அறிவிக்கும் முன்னர் வாரியத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே சரியான ஒருங்கிணைப்பு இருத்தல் அவசியம்; அதற்கென ஒரு ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட வேண்டும்.

**244.** நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இதர தொடர்புடைய நடவடிக்கைகளில் ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்க, நில மதிப்பீடு மற்றும் கையகப்படுத்துதலுக்கு சுமார் ஒரு வருடம் என ஒரு குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**245.** உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளின் மீது சொத்து வரி விதிக்க ஏதுவாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஒட்டு மொத்த விற்பனை அல்லது தவணை முறையில் விற்கப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளின் பயனீட்டாளர் பட்டியலை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**246.** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் விற்பனை ஆகாத அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு கட்டிட உரிமக் காலமான மூன்றாண்டுகளுக்குப் பிறகு தனியார் குடியிருப்புகளுக்குச் சொத்து வரி விதிப்பதைப் போன்று சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

**247.** வாடகைக் குடியிருப்புத் திட்டங்களைப் பொறுத்தவரை, தற்போது நடைமுறையில் உள்ளபடி அரசின் நிதியினைப் பெற்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சொத்து வரி செலுத்தும் முறையே தொடரலாம்.

**தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்**

**248.** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஒட்டுமொத்த விற்பனை அடிப்படையில் குடியிருப்புகளை வாங்கிய சொந்தக்காரர்கள் பற்றிய விவரம் ஒவ்வொரு வருடமும் 6 மாதங்களுக்கு ஒருமுறை ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் வரி விதிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**249.** வாடகைக் குடியிருப்புகளைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமே சொத்து வரியைச் செலுத்திவிட்டு பின்னர் திரும்பப்பெறும் நிலையே தொடரலாம். அதில் எவ்விதமான தாமதமும் இருக்கக்கூடாது; மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சொத்துவரி செலுத்துவதற்கு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினை வாரியத்தின் வரவு–செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**250.** தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சித் தலைவர்கள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சுமுகமாகச் செயல்படவும் மற்றும் பிரச்சினைகளை பகுத்தறியவும், வாரியத்தின் அங்கத்தினர்களளகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**251.** தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சட்டத்தில் ஏதேனும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்திற்கும் மேலாகச் செயல்படத்தக்க விதிமுறைகள் இருந்தால் அவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப, திருத்தப்பட வேண்டும்.

**தமிழ் நாடு மின்சார வாரியம்**

**252.** அரசால் அறுதியிடப்படும் கட்டணத்தில் தமிழ்நாடு மின் வாரிய மின் கம்பங்களுக்காக பயன்படுத்தப்படும் நிலத்துக்கு தடவாடகை விதிக்க நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

**253.** அடுத்த சீராய்வு காலத்தில் இதர மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது போல் தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்துக்கான மின்கட்டணம் தனித்து இருக்க வேண்டும்.

**254.** தமிழ்நாடு மின் முறைப்படுத்தும் குழுமத்தின் இசைவைப் பெற்ற பின்னர் தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு 2007–08 நிதி ஆண்டிலிருந்து ஒரு யுனிட்டுக்கு 10 பைசா வீதம் மேல் வரி விதிக்கலாம்.

**255.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின் கம்பங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு மாற்றுவதற்குரிய கட்டணத்தை 5 சதவீதமாக குறைக்கலாம். உள்ளாட்சி அமைப்புகள் மின் கம்பங்கள் கொடுக்கும் நிலையில் இருந்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**256.** புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவதற்கு முன் வருவாய்த் துறையின்ரிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் பெற தமிழ்நாடு மின்சார வாரியம் வலியுறத்த வேண்டும்.

**257.** அனுமதியற்ற மனைப்பிரிவுகள் காளான்களாகப் பெருகுவதைத் தவிர்க்க, பட்டா நிலங்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து மறுப்பின்மைச் சான்று பெறப்படவேண்டும்.

**258.** தெருவிளக்குகள் இடம் மாற்றத்துக்கு கிராம ஊராட்சிகளால் மின் வினைஞர்களுக்கு வழங்கத்தக்க கட்டணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் விவாதித்த பிறகு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிர்ணயம் செய்யப்படவேண்டும். இந்த கட்டணத்தை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தம் செய்யலாம்.

**259.** மின் கட்டண நிலுவைக்கு துறைத்தலைமை அளவில் பகிர்வு செய்யப்பட்டதிலிருந்து கழிவு செய்வதாலும், தமிழ்நாடு மின்வாரிய மத்திய அலுவலகத்தில் ஒப்புதலாவதாலும் உள்ளாட்சி அமைப்புக் கணக்கில் பிரதிபலிப்பதில்லை. எனவே அவர்களுடைய கணக்கில் சேர்ப்பதற்காக உள்ளாட்சி அமைப்பு வாரியாக கிடைக்கப்பெற்ற நிலுவை விபரங்களைக் குறிப்பிடுமாறு தலைமைப்பொறியாளர் மற்றும் கோட்டப்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படவேண்டும். நிலுவைத்தொகையை பட்டுவாடா செய்யும் போது ஊராட்சிகள் அளவிலும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள் மூலம் வழங்கினால் அது முறையான கணக்கிற்கு ஏதுவாகும்.

**260.** காற்றாலை மூலம் மின்சக்தி தயாரிக்க உள்ளாட்சி கள் முன் வந்தால் அவைகளுக்கு உரிய அதிகாரம் வழங்கும் வகையில் சட்டத்தில் / விதியில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்மும். இதற்காக மின் சட்ட விதிகளை திருத்தலாம்.

**தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

**261.** தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டத்திற்கான செலவு , சீராக்கச் செலவு ஆகியவற்றை வழங்க வேண்டும்; அதன் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். திட்டம் குறித்து தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நகராட்சி மன்றம் மற்றும் ஊராட்சி மன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் பொறியாளர் பிரிவில் மட்டும் கலந்துரையாடும் நடைமுறை நிறுத்தப்பட வேண்டும்.

**262.** ஆயத்த செயற்பாட்டு முறை ( TURN – KEY)யில் வசூலிக்கப்படும் சென்டேஜ் கட்டணத்தை தற்போதுள்ள 13% லிருந்து 5% ஆகக் குறைக்க வேண்டும்.

**263.** அரசு, கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பராமரிப்பிற்கு வரையறைகளை தீர்மானித்தபின் தனியார் மயமாக்கலுக்குண்டான வாய்ப்புகளை வெளிக்கொணரவேண்டும்.

264. தாவர எரிபொருள் உபயோகிப்பதன் மூலம் நீர் இறைப்பான்களை இயக்கினால் எரிசக்திக்கான தொடர் செலவுகளைக் குறைக்கலாம்.

265. அனைத்துக் குடிநீர் நிலைத் தொட்டிகளிலும் தண்ணீர் அளவு மானியைப் பொருத்தவேண்டும். வழங்கப்படும் தண்ணீர் அளவிற்கு தகுந்தாற்போல் கட்டணங்கள் வசூலிக்கப்படவேண்டும்.

266. கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறுவதில் ஏற்கெனவே விளக்கியபடி பல இடர்பாடுகள் இருப்பதால் அந்தந்த இடத்து நீரை நீர்சுழற்சி முறையில் சுத்தப்படுத்தி அதனைப் பயன்படுத்தலாம்.

267. நிதிப்பகிர்வு அத்தியாத்தில் விளக்கியுள்ளபடி தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உள்ளாட்சி மன்றங்கள் 31.3.2005 அன்றுவரை செலுத்தவேண்டிய குடிநீர்க் கட்டண நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்கு அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு சிறப்பு மானியத்தொகை வழங்கலாம்.

268. சம்பந்தப்பட்ட அத்தியாத்தில் விளக்கியுள்ளபடி குடி தண்ணீர் வழங்கிய அளவு, பராமரிப்புச் செலவு மற்றும் 2000–05க்கு உண்டான கேட்பு ஆகியவை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையெனினும், ஒருகிலோ லிட்டருக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் குறைக்க வேண்டிய அவசியத்தில் உள்ளது. மேலும், பராமரிப்புச் செலவிற்கு வரையறை நிர்ணயிப்பதின் மூலம். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் திறமைமின்மையை வெளிக்கொண்டுவரமுடியும்.

**மாவட்டத்திட்டமிடல் குழு மற்றும் ஊரக வளர்ச்சி முகமை**

269. அக்டோபர் 2006ல் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் முடிவடைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மாவட்டத் திட்டக் குழுவின் 4/5 மடங்கு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள், 2001 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.

270. மாவட்டத் திட்டக்குழுவிற்கான சிறப்பு அழைப்பாளர்களில் கிராம ஊராட்சிகளிலிருந்தும், ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் பிரதிநிதிகளை சுழற்ச்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்க வேண்டும். இது மாவட்டத் திட்டக் குழுவை ஒரு கச்சிதமான மற்றும் உள்ளாட்சி அமைப்பின் ஒவ்வொரு அடுக்கிற்கும் பிரதிநிதித்துவம் கொண்ட அமைப்பாக உருவாக்க வழிவகுக்கும். அதுபோலவே, இக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படாத பேரூராட்சி / நகராட்சித் தலைவர்களையும் ஆண்டுக்கு ஒரு முறை, சுழற்ச்சி முறையில் சிறப்பு அழைப்பாளர்களாக ஆக்க வேண்டும்.

271. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்டத் திட்டக் குழுவின் செயலகமாகவும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், அக்குழுவின் உறுப்பினர்–செயலராகவும் செயல்பட வேண்டும்.

272. புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டத் திட்டக்குழு 2007–2012 ஆம் ஆண்டுகளுக்கான மாவட்டத் திட்டத்தை தயாரித்து, அவைற்றை மாநிலத் திட்டக் குழுவிற்கு, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறைக் கருத்துரு கிடைத்த பிறகு அனுப்பலாம்.

273. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 56 ஆவது பிரிவு ஆகியவற்றிற்கு சட்டத்திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர்களை நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம், மாவட்டத் திட்டக் குழுவின் தலைவர், மற்ற உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் அதிகம் ஏற்புடையவராக இருப்பார். அவ்வாறு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும் வரை, இப்போதுள்ள மறைமுகத் தேர்தல் முறையே தொடர்ந்து இருக்கலாம்.

நெடுஞ்சாலைத்துறை

274. அனைத்து ஊரகச் சாலைப்பணிகளையும் ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பொறியாளர் பிரிவின் மூலம் செயல் படுத்த வேண்டும் என இரண்டாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரை செய்ததை இவ்வாணையம் நிறைவேற்ற வலியுறுத்துகிறது. அரசாணை (நிலை) எண்.301, நெடுஞ்சாலைத்துறை, நாள் 22.12.2004ல் வெளியிடப்பட்ட அரசாணையைத் திரும்பப் பெறவேண்டும்.

275. ஊரகச் சாலைப் பணிகளை தேர்வு செய்வதற்கு தனியாக ஒரு திட்டத்தொகுப்பை தயாரித்து பராமரிக்க வேண்டும். இதிலிருந்து பேருந்து வழித்தடச் சாலைகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

.

276. ஊரகச் சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து 50 சதவீதத் தொகை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்ப்பட வேண்டும். மாவட்டத் திட்டத்திலிருந்து ஊராட்சிகளால் தேர்வு செய்யப்பட் பணிகளுக்கு இத்தொகை பயன்படுத்தப்பட வேண்டும்.

277. முக்கிய மாவட்டச் சாலைகளாக தரம் உயர்த்தப்படவேண்டிய இதர மாவட்டச் சாலைகளை நெடுஞ்சாலைத்துறையே தொடர்ந்து பராமரித்து வரலாம். தரம் உயர்த்தத் தேவையில்லாத மற்றவகை மாவட்டச் சாலைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்துவிடலாம். இதனால் இச்சாலைகளை நல்ல முறையில் பராமரிக்க ஏதுவாக இருக்கும்.

### மாவட்ட ஆட்சியர் மேம்பாட்டு நிதி

278. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலமான 2002 முதல் 2007 வரை சேம நிதியின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டு வந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மேம்பாட்டு நிதியினை 1.4.2007ல் இருந்து ரத்து செய்யலாம்.

279. உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான மாநில அரிசின் நிதிப்பகிர்விலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியினை அரசு நிர்வாகத்திற்கு வழங்குவது தன்னாட்சி முறையின் நோக்கங்களுக்கு எதிரானதாகும். என்பதால், மாநிலத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ( State Plan Fund) விருப்புரிமை நிதியினை ஏற்படுத்தி மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்குவதன் மூலம் மாவட்ட நிர்வாக அதிகாரியை அரசு வலுவடையச்செய்யலாம்.

### சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்

280. நகர்ப்புறப் பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 30 சதவீதத் தொகை குடிமைப்பணிகள் மேம்பாட்டுக்காக தனியே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**281.** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டின்படி நகர்ப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகளை சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயார் செய்யப்பட்ட திட்டத் தொகுப்பிலிருந்து (Shelf of Project) தேர்ந்தெடுக்க வேண்டுமேயன்றி தன்னிச்சையாக பணிகள் தேர்வு செய்யப்படக்கூடாது.

**282.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மேற்படி திட்ட நிதியின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கான தொடரும் பராமரிப்பு செலவுகளைச் செய்ய தயார் நிலையில் இருக்க வேண்டும்.

**283.** ஊரகப்பகுதிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவு தொடர்ந்து அதே அளவில் இருக்க வேண்டும். இருப்பினும், அதற்கான திட்டங்கள் / பணிகள் கிராம சபைகளினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத் தொகுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## அத்தியாயம்–XIII

## மாநில நிதி நிலைமை

**284.** மாநில அரசு, தொழில் வரிவீதத்தின் உச்ச வரம்பை நீக்கும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தொழில் வரி குறித்த விதிமுறைகளுக்கு தகுந்த சட்ட திருத்தம் கொண்டு வர மத்திய அரசை அணுக வேண்டும். இது போன்ற உச்சவரம்பு இல்லையென்றால் உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் பெருக்கும் தன்மையைப் பொறுத்து மாநில அரசே தொழில் வரி உச்சவரம்பை நிர்ணயிக்க முடியும்.

**285.** உள்ளாட்சி அமைப்புகளுக்கான மத்திய நிதிக் குழு மானியத்தினை 2001 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி வருடத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.150/– என்ற வீதத்தில் உயர்த்தி இம்மாநிலத்திற்கு அளிக்க வேண்டி அடுத்த மத்திய நிதி ஆணையத்திடம் எடுத்துரைக்க மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக்கொள்ள வேண்டும்.

**286.** மத்திய அரசு கட்டிடங்கள் / சொத்துக்கள்மீது சேவை வரி விதிக்க ஏதுவாக அரசியல் அமைப்பின் 285 பிரிவை திருத்தம் செய்ய மாநில அரசு மத்திய அரசை கேட்டுக்கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் – XIV

## நிதிப் பகிர்வுத்திட்டம் மற்றும் கண்காணிப்பு அமைப்பு முறை

**287.** ஆண்டு கூட்டு வளர்ச்சி வீத அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாநில அரசின் முக்கிய வரிகளான விற்பனை வரி , மோட்டார் வாகன வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் ஆயத்தீர்வை ஆகியவற்றின் முன் மதிப்பீடுகள் மற்றும் இதர வரிகள் மற்றும் செலவினங்கள் மீது நடுத்தரக்காலத் திட்ட அடிப்படையிலான முன்மதிப்பிடுகள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு முன்மதிப்பீடு செய்யப்பட்ட மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக்காலமான 2007–12 வரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ‘தொகுப்பு’ ‘ஆ’ வின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் நிதிப்பகிர்வு ஒவ்வொரு ஆண்டுக்கும் 10 சதவீதமாக ஆக இருக்கும்.

**288.** தொகுப்பு ‘அ’ வின்கீழ் மாற்றப்படும் (ஒப்படைக்கப்பட்ட வருவாய்) நிதி ஆதாரங்கள் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளின்படி இருக்க வேண்டும்.

**289.** தொகுப்பு ‘இ’ ன்கீழ் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானியமாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 0.5 சதவிகிதம் முதல் 1 சதவீதம் வரை வழங்க வேண்டும்.

**290.** நிகர வரி வருவாயைக் கணக்கிடுவதற்கு, வரியை வசூலிக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கான ஊதியத்தை மட்டும் வசூல் கட்டணமாகவும் மற்றும் மோட்டார் வாகன வரி வசூலில் இருந்து ஊரகச் சாலை மேம்பாட்டு நிதிக்கு மாற்றப்படும் தொகைகளையும் மட்டும் கழித்துக் கணக்கிட வேண்டும்.

**291.** ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தொகுப்பு ‘ஆ’ நிதியைப் பகிர்ந்தளிப்பது 58 : 42 என்ற விகிதாச்சாரத்தில் இருக்க வேண்டும்.

292. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே மாவட்ட ஊராட்சிக்கு 8 சதவீதமும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 32 சதவீதமும் கிராம ஊராட்சிகளுக்கு 60 சதவீதமும் நிதிப்பகிர்வுத் தொகைகளை பகிர்ந்தளிக்க வேண்டும்.

293. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறை மாநகராட்சிகளுக்கு 30 சதவீதம், நகராட்சிகளுக்கு 41 சதவீதம், பேரூராட்சிகளுக்கு 29 சதவீதம் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதிப் பங்கில் 10 சதவீதத்தை சென்னைப்பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

294. உள்ளாட்சி அமைப்புகளின் ஒவ்வொரு அடுக்கிற்குள்ளான நிதிப்பகிர்வு சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழி முறைகளின்படி இருக்க வேண்டும்.

295. மாநில நிதி ஆணைய நிதிப்பகிர்வுத் தொகைகள் தற்பொழுது மாதந்தோறும் வழங்கப்படுவது போலவே ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்தில் அம்மாதத்திற்குரிய தவணைத் தொகையை விடுவிக்க வேண்டும்.

296. நகர்பபுறப் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1997 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட நிதிப்பகிர்வுத் தொகைகளில் நிலுவைத் தொகையான ரூ 285.30 கோடியை 2007–2008 ஆம் ஆண்டில் சரிக்கட்ட வேண்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகப்படியாக வழங்கப்பட்ட நிதிப்பகிர்வுத் தொகையை மிகுந்த கால தாமதத்திற்கு பின்னர் விடுவிக்கப்பட்டதால் தள்ளுபடி செய்துவிடலாம்.

297. தொகுப்பு ‘ஆ’ன்கீழ் நிதியை பகிர்வு செய்யும்பொழுது கிராம ஊராட்சிகளுக்கு பகிர்வு செய்யப்பட்ட தொகையில் 3 சதவீதத் தொகை ஊக்க நிதியாக ஒதுக்கப்படவேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புளுக்கு 5 சதவீத ஊக்க நிதி ஒதுக்கப்பட்டு பகிர்வுமுறை அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளவாறு பகிர்வு செய்ய வேண்டும்.

298. ஊக்க நிதியை பகிர்வு செய்து விடுவிப்பது பற்றி சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது ஊக்க நிதியை ஆண்டின் கடைசியில் விடுவிக்கும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டாவது காலாண்டில் ஊக்க நிதியை விடுவித்துவிடவேண்டும்.

299. திட்ட நிதியிலிருந்து 1 சதவீதத் தொகை கிராம ஊராட்சிகளின் அவசரத் தேவையெனக் கருதப்படும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இந்நிதி மாநில நிதி ஆணையை பகிர்வு நிதியில் ஒருபகுதியாக இருக்கக்கூடாது.

300. தற்பொழுது உள்ளதைப்போல் உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கான தொகையை மொத்த நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநருக்கு அனுப்பவேண்டும். இதேபோன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நிதியும் ஒவ்வொரு ஆண்டிற்கான மொத்த பகிர்வு நிதியிலிருந்து தேவைக்கேற்ப பிடித்தம் செய்து தற்போது போன்று தனிக்கணக்கில் வைக்க வரவேண்டும்.

301. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன்தொகையை பிடித்தம் செய்வது மொத்த நிதிப்பகிர்வில் 25 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

**கண்காணிப்பு அமைப்பு முறை**

302. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் அனைத்து பரிந்துரைகளின்மீதும் இவ்வாணையத்தின் பரிந்துரைக்காலம் தொடங்கியதிலிருந்து ஆறு மாத்திற்குள் முடிவு எடுக்கப்படவேண்டும்.

303. ஒவ்வொரு ஆண்டிலும் வரவு– செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் பொழுது அதனுடன் அரசு முடிவு செய்ததற்கிணங்க அந்த ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட நிதிப்பகிர்வுத் தொகை பற்றிய விவரத்தையும் சட்ட மன்றத்தில் வைக்கவேண்டும்.

**304.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஆகியவற்றின் கொள்கை விளக்கக் குறிப்புகளை சட்டப்பேரவையின் ஒப்புதலுக்காக வைக்கும் போது அவற்றுடன் நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது வெளியிடப்பட்ட ஆணைகள் பற்றிய விவரங்களையும் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

**305.** நிதி ஆணையப் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகளைச் செயல்படுத்துவதை ஆய்வு செய்யும் பொருட்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தனிக்குழு ஒன்றை அமைக்க அரசு பரிசீலிக்கலாம்.

**306.** பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளின் தொடர் நடவடிக்கைகளை இதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு ஒவ்வொரு காலாண்டிலும் கண்காணிக்க வேண்டும்.

**307.** உள்ளாட்சி அமைப்புகள் திறம்படச் செயல்படுவதை உறுதிசெய்ய அதற்கான அத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பது போல் உள்ளாட்சி அமைப்புக் குழுக்களை அமைக்கலாம். இக்குழு திறம்படச் செயல்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

**308.** சம்பந்தப்பட்ட அத்தியாயத்தில் கூறியுள்ளபடி, நிதித்துறையின் கண்காணிப்புப் பிரிவு மேலே குறிப்பிட்ட உள்ளாட்சி அமைப்புக் குழுக்களுக்கு அரசின் கொள்கைகளை விளக்குதல், வரி அமைப்பில் மாற்றம் மற்றும் இதர விஷயங்கள் குறித்து உதவி செய்யும்.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட பரிந்துரைகள், அத்தியாயம்–IIல் விளக்கியுள்ளபடி ஆணையத்தின் அணுகுமுறையின்படி அமைந்துள்ளது. அறிக்கையின் செயல்படுத்தக்கூடிய பரிந்துரைகளின் அத்தியாயங்கள் IIIலிருந்து XIV வரை ஆகும். இது உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்துச் செயல்பாடுகளையும் உள்ளடக்கி உள்ளது. ஆணையத்தின் பரிந்துரைகள் அனைத்தும் அரசால் செயல்படுத்தப்படுமானால், மக்கள் வாழத்தக்க வாழ்க்கையை மேற்கொள்ள வகை செய்யும் வண்ணம் உள்ளாட்சி அமைப்புகளின் நிதிகள் மற்றும் பணிகளில் முன்னேற்றம் காணப்படும் என்பது இவ்வாணையத்தின் நம்பிக்கையாகும்.